பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 17 வியாழக்கிழமை (03-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:310

# இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பதானால் புலிகளின் ஆயுதங்களைக் களையவேண்டும்

## ஆயுதக் குழு நிர்வாகம் நடத்தமுடியாது என்கிறார் ஜனாதிபதியின் பேச்சாளர்

கொழும்பு,ஒக்.3

ஆயுதக்குழு ஒன்று நிர்வாகப் பொறுப்பேற்று ஆட்சி நடத்தக் கூடாது. அதற்கு அனுமதியும் வழங்க லாகாது. அந்த வகையில் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறார்கள் என்றால் அதற்கு முன்னர் அவர்கள் ஆயுதங் களைக் கைவிடவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதி பதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ். நேற்று கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

யுத்தத்தில் எங்களுக்கு நாட்டம் இல்லை. சமாதானத்தை அடைவதில மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படுகிறோம் என்று கூறும் விடுதலைப் புலிகள், ஏன் ஆயுதங்களை இனியும் வைத் திருக்கவேண்டும்? அவற்றைக் கை விடலாம்தானே. அதன் பின்னர் அர சியல் நிர்வாகத்தை நடத்த அவர்கள் முன்வரட்டும். (2ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கைதான படையினர் விவரம் கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.3

விடுதலைப் புலிகளினால் திரு கோணமலை வில்கம் விகாரை அருகே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ள இராணுவ வீரர்கள் தொடர்பான விபரமான அறிக்கையொன் றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைக் கேட் டுள்ளார்.

இவர்களை விரைவில் விடுதலை (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு சிவாஜிலிங்கம் அவசர கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

களுத்துறைச் சிறைச்சாலையில் நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக் கும் கைதிகளை நேரில் பார்வை யிட்டு அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர் ஒருவரை உடன டியாக சிறைச்சாலைக்கு அனுப்புங் கள்.

- இவ்வாறு கோரும் அவசர கடி (14ஆம் பக்கம் பார்க்க)

# கைதான படையினரில் ஒருவர் பிரபாவின் பணிப்பில் விடுதலை

## ஏனைய அறுவரையும் விடுவிக்க புலிகள் நிபந்தனை விதிப்பு

திருகோணமலை,ஒக்ரோபர்3

**தாம் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கும் இராணுவத்தினர் ஏழு பேரில் ஒருவரை விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப்படையில் விடுவித்திருக் கின்றனர்.**

**தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்த பணிப்புரையின் பேரில் தீபால் சமந்த என்ற சிப்பாய் திருகோணமலையில் நேற்று மாலை விடுவிக்கப்பட்டார்.**

ஏனைய ஆறு இராணுவத்தினரை யும் விடுவிப்பதற்குப் புலிகள் தாம் ஏற்கனவே விதித்த நிபந்தனையை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். அதா வது கந்தளாய் பொலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியதன் விளைவாக விளக்க மறியலில் இருக் கும் புலிகள் இருவரையும் அரசு விடு விக்கவேண்டும் என்பதே புலிகளின் நிபந்தனை ஆகும்.

புலிகளினால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த தீபால் சமந்த என்ற இராணுவச் சிப்பாயின் மகன் கடும் சுகவீனமுற்றிருக்கிறார். (14ஆம் பக்கம் பார்க்க)



## மாணவியை துரத்திய சிப்பாய்

யாழ்ப்பாணம்,ஒக்.3

மட்டுவில் கமலாசனி வித்தியா சாலை மாணவி ஒருவர் நேற்றுக் காலை பாடசாலைக்குச் செல்லும் வழி யில் சிப்பாய் ஒருவரால் துரத்தப்பட் டார் என்று பாடசாலை அதிபர் முறை யிட்டிருக்கிறார்.

கனகன்புளியடி - புத்தூர் வீதி யில் நடந்து வந்து கொண்டிருந்த இந்த மாணவியை அழைத்த பிரஸ் தாப சிப்பாய் அவரை சிறிது தூரம் துரத்திச் சென்றார் என்றும் - (14ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத்தில் வழக்குப் பதிவாகிவிட்டது

# புலிகள் இருவரையும் அரசு விடுதலை செய்ய முடியாது!

## கண்காணிப்புக் குழு மூலம் சமாதான செயலகம் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.3

தமது காவலில் இருக்கும் ஆறு இராணுவத்தினரை விடுவிக்க, பொலீ ஸாரினால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் இருவரையும் விடு விக்குமாறு விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துவிட்டது. சமாதானச் செயல கம், இலங்கைக் கண்காணிப்புக் குழு ஊடாக இத்தகவலைப் புலிகள் இயக்கத்திடம் அறிவித்திருக்கின்றது.

நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் அந்தப் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருப்பதால் அவர்களை விடுதலை செய்ய அரசாங் கம் நடவடிக்கை எடுக்க முடியாதி ருப்பதாக இலங்கைக் கண்காணிப்பு குழு புலிகளிடம் தெரிவித்திருக்கின்றது. (2ஆம் பக்கம் பார்க்க)



கும்புறுபிட்டி சனசமூக நிலையத் தில் நடைபெற்ற கைதி கையளிப்பு நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக் ஆவணங்களில் ஒப்பமிடுவதையும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவில் இணைப்பாளராக கடமையாற்றும் வணபிதா திஸாநாயக்கா, கண்கா ணிப்பாளர் அப்துல் புறுக்கான், இராணுவவீரர் தீபால் சமந்த, செஞ் சிலுவைக் குழு பிரதிநிதிகள் டுண்சன் பொண்ட், திருகோணமலை வதி விடப் பிரதிநிதி லீனா மில்னர் ஆகி யோர் அவதானிப்பதை முதற் படத்தி லும் விடுவிக்கப்பட்ட கைதி வாகனத் தில் ஏற்றப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## இயக்கத்தில் இணையவந்த 12 சிறுவர்களைப் புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

விடுதலைப் புலிகள் இயக்கத் தில் இணைந்துகொள்ளவந்த 18 வயதுக்குக் குறைந்த 12 சிறுவர்கள் நேற்று அவர்களின் பெற்றோரிடம் புலி களால் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று மாலை 4.30 மணியள வில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை பணிமனை (14ஆம் பக்கம் பார்க்க)



பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள்

## குண்டுவெடிப்பு அதிர்ச்சியில் ஜனாதிபதி உளறுகிறாராம்!

### ஐ.தே.கட்சி அறிக்கை

(முன்னர் நடந்த குண்டுவெடிப்பில் அதிர்ச்சியடைந்து உளறத்தொடங்கி விட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கல்வி அமைச்சராக இருந்போது கொழும்பு றோயல் கல்லூரியில் மாண வர்களைச் சேர்ப்பதற்கு லஞ்சம் வாங்கினார். அதனால்தான் தன்னு டைய பிள்ளையை றோயல் கல்லூரி யில் சேர்க்கமுடியாமல் போயிற்று என்று ஜனாதிபதி கூறியிருப்பதும் உளறல்; சோடனைக்கதை.

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சி தனது அறிக்கை ஒன்றில் தெரிவித் திருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க லஞ்சம் வாங்கியிருந்தால் அதைக் கண்டு பிடிக்க ஜனாதிபதிக்குப் பதினைந்து (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆயர், அமைச்சர் மகேஸ்வரன் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.ஆயர் அதி.வண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் வட பிராந்திய கடற்படைத்தளபதி ரியல் அட்மிரல் ஆர்.பி.வீரசேகரவைச் சந் தித்து, தீவுப்பகுதி நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்தில் பிற்பகல் 2.30 மணிமுதல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

குறிப்பாக காரைநகர், மண்டை தீவு பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பரச்சினைகள் குறித்து யாழ்.ஆயரும் (2ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

### ஐ.சி.சி. சம்பியன் கிண்ணக் கிரிக்கெட்:

## ஆட்டநிர்ணய சதி குறித்து ஆராய உதவுமாறு இன்ரர்போலிடம் பொலீஸார் கோரிக்கை!

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளின் போது ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றதா என்பதைக் கண்டறிவதற்கு சர்வதேச புலனாய்வு அமைப்பான இன்ரர்போலின் உதவியை இலங்கைப் பொலீஸார் கோரியுள்ளனர்.

இப்போட்டியின்போது மேற்கிந்திய கிரிக்கெட் முகாமையாளர் ரிக்கி ஸ்கெரிட் மற்றும் கணனி இயக்குநர் கார்பீல்ட் ஸ்மித் ஆகியோரின் ஹோட்டல் அறையில் மூன்று பெண்கள் காணப்பட்டனர் என பொலீஸார் ஐ.சி.சி. அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனர்.

இப்பெண்களில் இருவர் பொலீஸாருக்குச் சமர்ப்பித்த அடையாள ஆவணங்கள் போலியானவை என்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுடன் இருந்த மற்றொரு பெண் ஆஸ்திரேலிய சாரதி அனுமதிப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்துள்ளார். அவரது பின்னணி குறித்து ஆராய விரும்புவதாக பொலீஸ் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

"போலியான ஆவணங்கள் சமர்ப்பித்ததையடுத்து அவர்களுக்கு ஆட்ட நிர்ணய சதியுடன் தொடர்பு இருக்கிறதா என ஆராயும் நோக்குடன் விசாரணைகளை விரிவு படுத்தியுள்ளோம்." - இவ்வாறு மேற்படி பொலீஸ் அதிகாரி கூறினார். எனினும், எந்த வோர் அணியையோ, வீரரையோ பொலீஸார் குறிப்பாக குற்றம் சுமத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

விலைமாதர்கள் மூலம் வீரர்களுடன் சூதாட்ட முகவர்கள் தொடர்பு கொண்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஆஸி.-பாக். டெஸ்ட் தொடர் இன்று கொழும்பில் ஆரம்பம்!

ஆஸ்திரேலியா, பாக்கிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பு பி.சரவணமுத்து அரங்கில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

இலங்கையில வெளிநாட்டு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியொன்று நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். 1912இல் இங்கிலாந்தில் நடைபெற்ற முக்கோண டெஸ்ட் தொடரொன்றில் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகள் மோதின.

அதன் பின் கடந்த மார்ச் மாதம் பாக்கிஸ்தான், மேற்கிந்திய அணிகள் சார்ஜாவில் இரு டெஸ்ட் போட்டிகளில் மோதின.

இந்நிலையில் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த டெஸ்ட் தொடரை கொழும்பிலும் சார்ஜாவிலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக ஆஸி.அணி பாக்கிஸ்தானுக்கு விஜயம் செய்ய மறுத்தமையே இதற்குக் காரணம். (ஐ)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு

**திக்கம் மைதானத்தில்**

*14 வயதுப் பிரிவு*

★ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி

*18 வயதுப் பிரிவு*

★ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை

**ஞானசாரியார் கல்லூரி**

*16 வயதுப் பிரிவு*

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் ஞானசாரியார் கல்லூரி

*18 வயதுப்பிரிவு*

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் ஞானசாரியார் கல்லூரி

**நெல்லியடி ம.ம.வில்**

*16 வயதுப்பிரிவு*

★ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் வல்வை சிதம்பராக் கல்லூரி

★ கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி எதிர் பொன்னம்பலம் வித்தியாலயம் (எ-5)

* * *

யாழ்மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் எதிர்வரும் 5ஆம், 6 ஆம் திகதிகளில் நடத்துவதற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மெய்வன்மைப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளர் சண்.தயாளன் அறிவித்துள்ளார். (எ-5)

* * *

யாழ்மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணையுடன் சங்குவேலி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சங்குவேலி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் இணுவில் அண்ணா வி.கழகமும் மானிப்பாய் ஆனந்தா வி.கழகமும் பங்குபற்றுகின்றன.(எ-5-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.3

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை முதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

**இளவாலை ஹென்றியரசர் கல்லூரி**

*16 வயதுப்பிரிவு*

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

18 வயதுப்பிரிவு

★ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

★ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

*16 வயதுப்பிரிவு*

★ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா.றோ.க.த.க.பாடசாலை

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

*18 வயதுப்பிரிவு*

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம். (எ-5-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.3

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு :-

*18 வயதுப்பிரிவு*

★ ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

★ புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் எதிர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி

இதேநேரம் 16 வயதுப் பிரிவினர்களுக்கான அரையிறுதி ஆட்டங்களும் இன்று இடம்பெறவுள்ளன. (எ-5-86)

# தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ள எழு பேர் நாளை விடுவிப்பு!

## மேலும் 30 பேர் அங்குள்ளனர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 37 பேரில் 7 பேர் நாளை விடுதலை செய்யப்படவிருப்பதாக புனர்வாழ்வு நிலைய அதிகாரி தெரிவித்தார்.

நிலையத்தின் செயற்பாடுகள் குறித்துக் கேட்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பல பகுதிகளிலும் படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களில் 37 பேர் தற்சமயம் இந்த நிலையத்தில் புனர்வாழ்வு பெற்றுவருகின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் சரணடைந்த 12 பேரும் இங்குள்ளனர்.

இந்த முகாமில் ஒருவருக்கு ஒரு வருடம் புனர்வாழ்வு அளிக்கப்படும். அதன் பின்னர், அவர் விடுவிக்கப்படுவார். இந்த வகையில் ஒரு வருடம் பூர்த்தியான 7 பேர் நாளை விடுவிக்கப்படவிருக்கின்றனர்.

நிலையத்தை நிர்வகிக்கப் போதிய நிதி உதவி அரசிடம் இருந்து கிடைக்காததால் நிதி நெருக்கடி நிலை தொடர்கின்றது.

முகாமில் உள்ளவர்களுக்கு பி.பி.ஸி நிறுவனம் கடந்த 24 ஆம் திகதி உடுபுடைவைகள் அன்பளிப்புச் செய்துள்ளது. அகதிகளுக்கான ஐ.நா.தூதரகமும் உதவிகளை வழங்கி வருகின்றது - என்றார் அவர்.(ம-3-8)

## யாழ்.பல்கலை ஊழியர் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

களனிப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கடந்த 55 நாள்களாக மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்று பல்கலைக்கழகப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. ஊழியர்கள் வளாகத்துக்குச் சமுகமளித்திருந்தபோதிலும் அவர்கள் பணிகள் எவற்றிலும் ஈடுபடவில்லை.

எனினும், பல்கலைக்கழகத்தின் ஏனைய பணிகள் வழமைபோல் இடம்பெற்றன. (எ-5-4)

## தொழில் அமைச்சருடன் சம்பந்தனும் யாழ்.வருகிறார்

இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள வேலைவாய்ப்பு, தொழில் அமைச்சர், மகிந்த சமரசிங்க மற்றும் குழுவினருடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான இரா. சம்பந்தன் ஆகியோரும் வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-10)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கப் பேச்சாளரான கையிரிக்க பேருசிங்க இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

சாதாரண சட்டத்தின் கீழ் புலி உறுப்பினர்கள் இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருப்பதால் நீதி மன்றமே அவர்களை விடுதலை செய்ய வேண்டும். ஆயினும், வழக்கு விசாரணை முடிவடைவதற்கு முன் அவர்கள் இருவரும் பிணை அனுமதி பெற்றுக் கொள்ளமுடியும்.

அவர்கள் இருவரையும் பிணையில் விடுவிக்கும் அவசியம் புலிகள் இயக்கத்துக்கு இருக்குமேயானால் அதற்கான பிணை மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து புலிகள் இயக்கம் பிணையைப் பெறமுடியும்.

- இவ்வாறு அரசாங்கம் கண்காணிப்புக் குழு ஊடாக புலிகள் இயக்கத்திடம் அறிவித்திருக்கிறது. (ஐ-5)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, கண்ணிவெடி அகற்றல் என்பவற்றை மட்டும் ஆராயாமல் விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவு பற்றியும் பேசப்படவேண்டும்.

அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒன்றே இரு தரப்பினருக்கும் இடையில் சிக்கலான ஒரு விடயம். நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்தி வருகிறார். அதன் மூலம் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார் என்று குற்றச்சாட்டு அரசாங்கத்தைப் பொறுத்தது; அது அவர்கள் சம்பந்தப்பட்ட விடயம். அது எந்தவகையிலும் அரசு - ஜனாதிபதி இணைந்து செயற்படும் தன்மையைப் பாதிக்காது; பாதிக்கவில்லை - என்றார்.

பிரதமர் மீது ஜனாதிபதி தொடுத்துள்ள லஞ்சக் குற்றச்சாட்டுத் தொடர்பாக அவரிடம் கேட்டபோது -

ஜனாதிபதி ஒருபோதும் எவரது பெயரைக் குறிப்பிட்டும் குற்றம் சுமத்தவில்லை என்று ஹரீம் பீரிஸ் பதிலளித்தார். (ஐ-5)

## மட்டு. சிறைக்கைதிகளும் நாளை முதல் உண்ணாவிரதம்

### களுத்துறை போராட்டம் தொடருகிறது

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள சிறைக் கைதிகளுக்கு ஆதரவாக மட்டக்களப்புச் சிறையில் உள்ள கைதிகளும் நாளை 4ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த முதலாம் திகதி முதல் 139 கைதிகள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். நேற்று இரண்டாவது நாளாக அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வெலிக்கடை சிறைச்சாலை பெண்கள் பிரிவில் 12 பெண் கைதிகள் உள்ளனர் மகஸின் சிறைச்சாலையில் 11தமிழ்க் கைதிகள் உள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளைத் தவர வேறு எந்தச் சிறையிலும் இதுவரை எவ்வித உண்ணாவிரதப் போராட்டங்களும் இடம்பெறவில்லை என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-5)

### வலிகாமம் கிழக்கில்

## மீளக்குடியமர்ந்த விவசாயிகள் இன்று உபகரணம் பெறுவர்

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீளக்குடியமர்ந்தவர்களில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட - தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் இன்று விவசாய உபகரணங்களையும், விதை தானியங்களையும் வழங்கவுள்ளது.

இருபாலை தெற்கு ஜே/257 கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இன்று காலை 8.30 மணிக்கும் - சிறுப்பிட்டி மேற்கு ஜே/272 கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் காலை 8.45 மணிக்கும் -

நவக்கிரி ஜே/275 கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் காலை 9 மணிக்கும் - புத்தூர் கிழக்கு ஜே/278 கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நண்பகல் 12 மணிக்கும் -

அச்செழு ஜே/279 கிராம உத்தியோகத்தர் - அலுவலகத்தில் நண்பகல் 12 மணிக்கும் வைத்து இந்த பொருளகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் குறிப்பிடப்பட்ட நேரங்களில் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-180)

## உடதலவின்ன கொலை வழக்கு நாளை வரை ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.3

கண்டி, உடதலவின்ன 10 பேர் படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் 11எதிரிகளில் 8 பேர் நாளை 4ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவர். இவ்வழக்கு நேற்று தெல்தெனிய நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, அவரது இரு புதல்வர்களான சானுக்க, லொகான் ஆகியோர் ஏற்கனவே பிணையில் விடப்பட்டிருக்கின்றனர். இவர்களும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இவ்வழக்கில் 40ஆவது சந்தேகநபரான தெல்தெனியவைச் சேர்ந்த விஜேசிங்க மஹிந்த என்பவரை அரச சட்டத்தரணியின் கோரிக்கையின் பேரில் கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேல் விசாரணை நாளை 4 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

### பரிசளிப்பு விழா

வலி.கிழக்கு,ஒக்.3

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ. இராசசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-180)

## யாழ்.ஆயர், அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரும் கடற்படைத் தளபதியோடு விரிவாகக் கலந்துரையாடினர்.

மண்டைதீவுப் பகுதியில் உள்ள சுமார் 70 வதிவிடங்களில் கடற்படையினர் நிலைகொண்டுள்ளனர். என்றும் அவற்றில் சுமார் 50 வதிவிடங்களிலிருந்து அடுத்த இருவாரகாலத்துக்குள் அவர்கள் வெளியேறிவிடுவர் என்றும் கடற்படைத் தளபதி தம்மிடம் உறுதியளித்தார் என்று அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி தெரிவித்த ஏனைய விடயங்கள் வருமாறு:-

★ மண்டைதீவு இறங்குதுறையை மீனவர்கள் பயன்படுத்த உடனடியாக அனுமதி வழங்கப்படுகிறது.

★ ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக மூடப்பட்டிருக்கும் பொன்னாலை கிருஷ்ணன்கோயில் வீதி, காரைநகர் சுற்றுவீதி ஆகியன உடனடியாக மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்படும்.

★ காரைநகர் துறைமுகத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் சேவையிலீடுபடும் இழுவைப்படகு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படும்

★ மண்டைதீவு, மூளாய், பொன்னாலை பகுதிகளில் வந்து குடியமர்ந்த மீனவர்கள் தங்கள் பகுதி பிரதேச செயலரின் சிபார்சுக் கடிதத்தை சமர்ப்பித்தால் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

★ காரைநகர் கடற்படைத் தளத்துடன் அமைந்த இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் மற்றும் கிட்டங்கி பிள்ளையார் கோயில் புனரமைப்பு மற்றும் பூஜை வழிபாடுகளுக்கு அனுமதி.

★ மண்டைதீவு தேவாலயத்தில் தங்கியிருந்து தினமும் பூஜை நடத்த அனுமதி. (ஐ3)

# ஈராக்குடன் போர் புரிய அமெரிக்காவுக்கு மாதாந்தம் 9 பில்லியன் டொலர் தேவை

வாஷிங்ரன்,ஒக்.3

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுத்தேதீருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறது அமெரிக்க அரசு. ஆனால், போர் தொடுத்தால் மாதந்தோறும் 9 பில்லியன் டொலர் செலவாகும் என்று நிதி வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்த வாரம் சிக்கன நடவடிக்கை குறித்த விவாதம் வருகிறது.

இந்த நிலையில், ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டால், செலவுச் சுமை ஏராளம் என்கிறார்கள் வல்லுநர்கள்.

போர் ஆரம்பித்தால், எவ்வளவு காலம் நீடிக்கும் என்று தெரியாது. போரின் வேகம் எப்படியிருக்கும் என்றும் தெரியாது. இந்நிலையில், தற்போதைய நிலைவரப்படி போருக்கு செலவாகும் உத்தேசக் கணக்கைப் பார்த்தால் கூட ஏராளமான மில்லியன்கள் செலவாகும் எனத் தெரியவந்துள்ளது.

போர் அறிவித்து படைகளை அனுப்புவதற்கு மட்டுமே மொத்தம் இந்திய மதிப்பில் ரூபா 65.ஆயிரம் கோடி செலவாகும். போர் நடக்கும் போது தரைப்படைத் தாக்குதல், விமானப்படைத் தாக்குதலுக்கு மட்டுமே மாதந்தோறும் ரூபா 45.ஆயிரம் கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. போர் நடந்து முடிந்த பின்பு படைகளைத் திருப்பி அழைத்துக் கொள்வதற்கு மட்டும் ரூபா 35 ஆயிரம் கோடி செலவாகும்.

அத்துடன் முடிந்து விடுவதில்லை. போர் ஓய்ந்தபின் அங்கே அமைதிப் படையை நிறுத்த அதற்கு மட்டும் மாதம் 20 ஆயிரம் கோடி இந்திய ரூபாக்கள் செலவாகும்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான நிவாரண உதவிகளைச் செய்யவேண்டும். ஆபத்தான ஆயுதங்களை அழிக்க வேண்டும். சிதைந்த இடங்களை சீரமைக்கவேண்டும். இதற்கெல்லாம் பல மில்லியன்கள் செலவாகும் என கவலை தெரிவிக்கிறார்கள் அமெரிக்க நிதி வல்லுநர்கள்.

அமெரிக்க நாடாளுமன்றம் இந்தச் செலவுகள் குறித்தும் ஆராயும் என்று தெரியவந்துள்ளது.

(ம)

துருக்கியத் தளம் ஒன்றில் தரித்து நிற்கும் அமெரிக்க போர் விமானம்.



## தீவிரவாதிகளின் தாக்குதலில் காஷ்மீரில் பத்துப் பேர் பலி!

புதுடில்லி,ஒக்.3

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதல்களில் குறைந்தது பத்துப் பேர் கொல்லப்பட்டனர். மாநிலத்தின் இறுதிக்கட்ட தேர்தல் வாக்களிப்பு நடைபெற்று முடிந்த ஒரு நாளின் பின்னர் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

டாரில் தீவிரவாதிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இந்திய எல்லைப்படையைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர். குப்புவாரா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர்.

முன்னதாக மாநிலத்தின் தென் பகுதியில் இந்து மத யாத்திரிகர்கள் பயணம் செய்த பஸ் ஒன்றில் தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்து இருவர் கொல்லப்பட்டனர். 22பேர் காயமடைந்தனர்.

உலக அரங்கில்

இந்தக் குண்டுத் தாக்குதலில் யாத்திரிகர்களின் பஸ் எரிந்து மிக மோசமாகச் சேதமடைந்தது. 'திடீரென பஸ்ஸின் மத்திய பகுதியில் இருந்து வெடிச்சத்தம் கேட்டது. உடனடியாகவே பஸ் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது' என்றார் பஸ்ஸின் சாரதியான பிரகாஷ் சிங்.

எரியும் பஸ்ஸில் இருந்து வெளியேறுவதற்கு யாத்திரிகர்கள் முண்டியடித்ததிலேயே பலர் காயமடைந்ததாக அவர் மேலும் கூறினார்.

(ம)

# தெரேஸாவுக்கு புனிதர் பட்டம்

## வத்திக்கான் அனுமதி

வத்திக்கான்,ஒக்.3

அன்னை தெரேஸாவுக்கு புனிதர் பட்டம் வழங்க வத்திக்கான் அங்கீகாரம் அளித்துள்ளது.

அன்னை தெரேஸா நிகழ்த்திய அற்புதங்களின் அடிப்படையில் அவருக்குப் புனிதர் பட்டம் வழங்குவது குறித்து வத்திக்கான் ஆராய்ந்து வந்தது.

இந்தியப் பெண் ஒருவரின் வயிற்றுப் பகுதியில் இருந்த கட்டியை அகற்றி அவருக்கு சுகமளித்து அன்னை தெரேஸா அற்புதம் நிகழ்த்தியிருந்தார். இது எப்படி நடந்தது என்று விஞ்ஞானபூர்வமான விளக்கம் கூறமுடியவில்லை.


இந்தச் சம்பவம் போப் ஆண்டவர் இரண்டாம் ஜோன் போலுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. தெரேஸாவுக்குப் புனிதர் பட்டம் வழங்குவதற்கு இந்த நிகழ்வையும் முக்கியமாகக் கொண்டு ஆராயுமாறு ஜோன்போல் வத்திக்கான் கர்தினால்களுக்கும் ஆயர்களுக்கும் பணித்தார்.

அதனடிப்படையில் வத்திக்கானில் நடத்தப்பட்ட தீவிர கலந்தாலோசனைக்குப் பின்னர் அன்னை தெரேஸாவின் அற்புதத்துக்கு அங்கீகாரம் வழங்க முடிவு செய்யப்பட்டது. இதனையடுத்து இனி 'புனிதர்' என்று அழைக்கப்படுவார். இதற்கான உத்தரவில் போப்பாண்டவர் விரைவில் கையொப்பம் இடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகபூர்வமாக அன்னை தெரேஸாவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டதும் மிகக் குறைந்த வயதில் புனிதர் பட்டம் பெற்றவர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

இத்தாலி நாட்டவரான தெரேஸா இந்தியாவின் கொல்கத்தா நகரில் தங்கியிருந்து ஏழைஎளிய மக்களுக்கு சேவையாற்றி வந்தார். அவர் ஒரு தனியான மிஷனை ஆரம்பித்து நடத்தியும் வந்தார். 1997ஆம் ஆண்டு அவர் தனது 87ஆவது வயதில் அமரத்துவம் அடைந்தார். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு நோபல் பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

(ம)



கொல்கத்தாவில் உள்ள அன்னை தெரேஸா மிஷனில் மாலைப் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ள கன்னியாஸ்திரீகள்.

# கண்காணிப்பாளர்களை அனுமதிப்போம்; புதிய பிரேரணையை ஏற்கப்போவதில்லை!

## துணைப் பிரதமர் அஸீஸ் தெரிவிப்பு

அங்காரா,ஒக்.3

ஈராக்கில் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் சோதனையில் ஈடுபடுவதற்காக புதிய பிரேரணை ஒன்றை ஐ.நா. நிறைவேற்றவேண்டிய தேவையில்லை.

- இவ்வாறு ஈராக்கிய துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ் தெரிவித்தார். துருக்கிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் நேற்று செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது "புதிய பிரேரணை நிறைவேற்றப்படவேண்டும் என்று ஈராக் கருதவில்லை" என்றார்.

ஐ.நா., ஈராக் தொடர்பாகப் புதிய தீர்மானம் எதையாவது நிறைவேற்றினால் ஈராக் அதற்கு ஒத்துழைக்குமா என்று அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயுதக் கண்காணிப்பாளர்கள் சோதனையிடுவதற்கு ஈராக் தனது எல்லைப் பரப்பின் ஒவ்வோர் அங்குலத்தையும் திறந்துவிடவேண்டும் இல்லையேல் அதன் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கோரிவருகின்றன. இதற்கான புதிய பிரேரணை ஒன்றை ஐ.நா.நிறைவேற்ற வேண்டும் என்றும் அவை கேட்கின்றன.

இந்த நிலையிலேயே அஸீஸ் மேற்கண்ட பதிலைத் தெரிவித்திருந்தார். ஈராக் விவகாரங்களில் தலையிடுவதற்கு, ஈராக்கிடம் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டை அமெரிக்கா பயன்படுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கர்கள் தமது நோக்கத்தில் உண்மையானவர்களாக இருந்தால், ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் ஈராக்கும் எட்டியுள்ள ஆயுத சோதனைக்கான உடன்படிக்கை குறித்து அது மகிழ்ச்சி அடைய வேண்டும் என்றார் அவர்.

ஈராக் மீது அமெரிக்கா தாக்கினால் அதனுடன் மீண்டும் ஒரு போரில் ஈடுபட ஈராக் நிர்ப்பந்திக்கப்படும். ஏற்கனவே 1991இல் அமெரிக்காவுடன் போர்புரிந்த அனுபவம் இருக்கின்றது.

- இவ்வாறு அஸீஸ் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

(ம)



ஈராக்கிய துணைப்பிரதமர் தாரிக் அஸீஸ் (இடது). துருக்கிய அதிபர் அஹமட் நிக்டெட் சஹீருடன் (வலது) காணப்படுகின்றார். நடுவில் இருப்பவர் அவர்களின் மொழிபெயர்ப்பாளர்.

# அமெரிக்காவில் 5ஆம் திகதி காந்திஜியின் சிலை திறப்பு

வாஷிங்ரன்,ஒக்.3

அமெரிக்காவில் உள்ள மில்வோகி நகரில் நாளை மறுதினம் 5ஆம் திகதி மகாத்மா காந்தி சிலை திறக்கப்படும்.

8.8 அடி உயரமுள்ள இச்சிலை வெண்கலத்தால் ஆனது.

அமெரிக்காவில் காந்திஜி பிறந்த நாள் கொண்டாடப்பட்டுவருகிறது. அதன் ஒரு பகுதியாக இச்சிலையை அமெரிக்க சுகாதாரத்துறை அதிகாரி டாமி தாம்சன் திறந்து வைக்கிறார். இந்தியத் தூதர் லலித் மான் சிங் கௌரவ விருந்தினராகப் பங்கேற்கிறார்.

இச்சிலையை கொல்கத்தாவைச் சேர்ந்த கௌதம் பால் வடிவமைத்துள்ளார்.

வாஷிங்ரனில் 2000ஆம் ஆண்டு செப்ரெம்பரில் பிரதமர் வாஜ்பாயும் அப்போதைய அதிபர் பில்கிளின்டனும் திறந்து வைத்த சிலையைப் போன்றே இதுவும் உள்ளது.

டில்லியில் உள்ள கலாசார உறவுக்கான இந்திய கவுன்ஸில் இச்சிலையை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சிலையை நிறுவுவதற்கான இடத்தைக் கையகப்படுத்தவும் இதர செலவுகளுக்கும் விஸ்கான்ஸில் உள்ள இந்தியர்கள் கூட்டமைப்பு நிதி திரட்டியது.

நிதி திரட்டுவதில் பல்க் பெற்றோலிய நிறுவனத் தலைவர் தர்ன் சிங், இந்தியர் கூட்டமைப்பின் தலைவர் பிரேம் சர்மா ஆகியோர் பெரும் பங்காற்றினர்.

(ம)

# ஐ.நா. - ஈராக் உடன்படிக்கையை ஏற்க அமெரிக்கா, பிரிட்டன் மறுப்பு

லண்டன்,ஒக்.3

ஐ.நா.கண்காணிப்பாளர்கள் மீண்டும் ஈராக்குக்குச் செல்வது குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவரும் ஈராக்கும் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்துள்ளன.

இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் திட்டவட்டமாகத் தெரிவித்தார். ஈராக்குக்கு எதிராக புதிய பிரேரணை ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும் என்றார் அவர்.

"ஈராக்கில் அரைகுறை ஆயுதச் சோதனை நடத்தப்படுவது குறித்து எமக்கு திருப்தி ஏற்படவில்லை. ஐ.நா.வுக்கு அழுத்தம்கொடுக்கும் பணியை நாம் தொடர்ந்து கொண்டே இருப்போம்" - என்றார் பவல்.

இதற்கிடையில் -

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கும் ஈராக்க அதிகாரிகளுக்கும் இடையில் வியன்னாவில் நடைபெற்ற பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. "ஈராக் கட்டுப்பாடற்ற ஆயுத சோதனைக்கு அனுமதி அளித்துள்ளது. ஆனால் அதிபர் சதாம் ஹுசேனின் எட்டு மாளிகைகள் அதற்குள் அடங்கமாட்டா" - என்று ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ் தெரிவித்தார்.

ஆனால் ஈராக்கின் பேரழிவு தரும் ஆயுதங்கள் அனைத்தும் அதிபர் சதாம் ஹுசைனின் மாளிகைகளிலேயே மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்கா மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டி வருகின்றது. எனவே ஆயுதக் கண்காணிப்பாளர்களால் அவையும் சோதனையிடப்பட வேண்டும் என்று அது வலியுறுத்துகின்றது.

(ம)

# வீடு இடிந்து வீழ்ந்ததில் சிரியாவில் 24பேர் பலி!

அல்போ,ஒக்.3

சிரியாவின் வடக்கு நகரான அலபோவில் பழைய வீடு ஒன்று இடிந்து வீழ்ந்ததில் குறைந்தது 24பேர் உயிரிழந்தனர். மேலும் 21பேர் காயமடைந்தனர்.



இடிந்து வீழ்ந்த வீடு

நேற்று மாலை உள்ளூர் நேரப்படி 4.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக நகர ஆளுநர் ஒஸாமா உடே தெரிவித்தார்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டவர்களை மீட்கும் பணியில் உதவிப் பணியாளர்கள் நேற்று மாலை முழுவதும் ஈடுபட்டிருந்தனர். இடிபாடுகளுக்குள் 40பேரளவில் சிக்கிக்கொண்டுள்ளதாக ஒரு செய்தி தெரிவித்தது.

உலகிலேயே பழைமை வாய்ந்த நகரங்களில் அல்போவுக்கு மிக முக்கிய இடம் இருக்கின்றது. இங்குள்ள கட்டடங்களும் நகரஅமைப்பும் மிகவும் பழைமை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பல இனங்களில் குருவிகள், பல வர்ணங்களில் மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (8786)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு.விலை 140/-.தொடர்பு: S.சிவகுமார், 19, புலவனார் வீதி, கல்வியங்காடு (சந்தைக்கு அருகில்).(8951)

## வீடு விற்பனைக்கு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அண்மையாக அமைந்துள்ள 16 பரப்புடைய சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இந்தி ஞானபண்டிதன், C/o பொ.திருச்சிற்றம்பலம், பிள்ளையார் கோயிலடி, மாதகல். (8970)

மாதகல் பிரதான வீதியில் அமைந்துள்ள 31/2 பரப்புடைய மேல்மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.ஞானபண்டிதன், C/o பொ.திருச்சிற்றம்பலம், பிள்ளையார் கோயிலடி, மாதகல். (8971)

வட்டுக்கோட்டை, வட்டு கிழக்கு, சங்கரத்தையில் 8 பரப்புக் காணியுடன் கூடிய நல்ல நிலையில் 5 அறைகள் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.நாகேஸ்வரி (தவமணி), டாக்டர் செல்லத்துரை வீதி, சங்கரத்தை. (8972)

## தவறிவிட்டது

செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த நவரத்தினராசா மயூரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.760021768V), சிறுதொகைப் பணத்துடன் யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.(8965)

## மணமகள் தேவை

லண்டன், கனடா, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் எஞ்சினியர், எக்கவுண்டன், கம்பனி வேலை செய்யும் மணமகன்களுக்கும், உள்நாட்டில் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், B.Sc., B.Com., B.A, சிறு உத்தியோகம் பார்க்கும் மணமகன்களுக்கும், மணமகள் தேவை. தொடர்பு: அபிராமி திருமண சேவை, முதலாம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (8968)

1966ஆம் ஆண்டு, மிருகசீரிடம் 3ஆம் பாதம், செவ்வாய்க்குற்றம் அற்ற, B.Sc. Teacher மணமகனுக்கு தொழில் புரியும் பொருத்தமான மணப்பெண் தேவை. (கடிதம் மூலமும் தொடர்பு கொள்ளலாம்.) தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 173, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8975)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக் குஞ்சுகள் 03.10.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும் (முன்கூட்டியே பதிவு செய்யவும்). தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8938)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் காண்ட ஏட்டில் தீவிரமான தீராத நோய் மாறிவிடல், அதிர்ஷ்ட பலன்பெறல். தொடர்பு: சனி, ஞாயிறு. 8.30-12.30 ஆடிய பாதம் வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (8978)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/துனவி அ.மி.த.க.பாடசாலை மாணவன்
செல்வன்
**மருதலிங்கம் விஜிராஜ்**

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அறிவு புகட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

துனவி, சங்கரத்தை. (8974) - பெற்றோர், உறவினர்.

## சேவை நலன் பாராட்டுவிழா அழைப்பு



**திருமதி ஜெயலட்சுமி சிவசுப்பிரமணியம்**
*(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)*

எமது உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில் விவசாய போதனாசிரியையாகக் கடமையாற்றி கடந்த 05.09.2002 வியாழனன்று ஓய்வு பெற்றுள்ள **திருமதி ஜெயலட்சுமி சிவசுப்பிரமணியம்** அவர்களுக்கு உடுவில் கமநல சேவைகள் நிலைய விவசாயிகளும் உத்தியோகத்தர்களும் குழு உறுப்பினர்களும் இணைந்து நடத்தும் சேவை நலன் பாராட்டுவிழா இன்று (03.10.2002) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கமநல சேவைகள் நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். அனைத்து விவசாயப் பெருமக்களும், அன்பர்களும் கலந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில். (8976)
கமநல சேவைகள் நிலையத்தினரும், விவசாயிகளும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலையைச் (பருத்தித்துறை)
சேர்ந்த மாணவன் செல்வன்
**செல்வக்குமார் பிருதிவிராஜன்**

அவர்கள் 135 புள்ளிகளைப் பெற்று 5ஆந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2002 இல் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு கல்வி புகட்டிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை. (C/24047) - பெற்றோர்.

## மனமுவந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை – 2002இல் சித்தியடைந்த மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையைச் சேர்ந்த

மாணவர்களான –

| | | | |
|---|---|---|---|
| மோ.ஜனகன் | 152 புள்ளி | சி.தார்மீகன் | 130 புள்ளி |
| சி.கோபிநாத் | 143 புள்ளி | சி.நர்மதா | 121 புள்ளி |
| சி.ரஜீபன் | 141 புள்ளி | த.வஜீதா | 120 புள்ளி |
| இ.யமுனாவாணி | 133 புள்ளி | அ.நிரோஜன் | 118 புள்ளி |

வெட்டுப்புள்ளியை அண்மித்தவர்களான –

| | | | |
|---|---|---|---|
| சி.யாழினியன் | 117 புள்ளி | ம.ஜெஸ்மினா | 115 புள்ளி |
| ம.மதுராஜினி | 115 புள்ளி | இ.கிங்ஸ்ரினா | 114 புள்ளி |

ஆகியோரைப் பாராட்டுவதுடன் அவர்களுக்கு அறிவூட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் நன்றிகூறி மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(8973) - பெற்றோர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவி
செல்வி
**றம்ஜா நந்தகோபால்**



அவர்கள் 5ஆந் தரப் புலமைப் பரிசில பரீட்சை 2002இல் 127 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதோடு, அறிவூட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துப் பாராட்டி அவர் மேன்மேலும் கல்வியில் சிறப்புற்று மிளிர இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு. (8980) - சகோதரர்கள்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்

எம்முடன்.. 06 - 10 - 1961



எம்மைவிட்டு.. 24 - 09 - 2000

**அமரர் வீரசிங்கம் உதயகுமார் (B.Sc.)**
(ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி-ஊர்காவற்றுறை)
திதி: 03.10.2002

அணைந்தும் அணையாத
அன்புத் தெய்வமே...!
ஆறுதலின்றித் தவிக்கின்றோம்
அவசரமாகச் சென்றதெங்கே...?
விழி தொடும் இடமெல்லாம்
விம்பம் போல் உங்கள் முகம்
விழித்திரையில் பட்டதும்
விடைகூறும்... கனவாக...

374, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர். (8981)
பிரிவால் துயருறும்: - குடும்பத்தினர்-


ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவனத்தின் வடபிராந்திய
இளைஞர் பிரிவினால் நடத்தப்படும்
மகத்தான கண்காட்சி

மனிதன் என்றால் யார்? மனதின் குறைபாடுகள் எவை?
குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் எப்படி?
இவற்றை விளக்கும்



"மனித உன்னதம்"

- சத்யசாயி எஜிகேயர்
- மனித மேம்பாட்டுக் கல்வி
- பாலவிகாஷ்
- தலைமைத்துவம்
- பெற்றோரியல்
- வீடியோப் படக்காட்சி

என்பனவும் அடங்கும்.

இடம்: வேலாயுதம் மகாவித்தியாலயம் - பருத்தித்துறை
காலம்: ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி - மாணவர், ஆசிரியர்களுக்கு மட்டும்!
5ஆம் திகதி - பொதுமக்களுக்கு
நேரம்: காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை.

பிரவேசம் இலவசம்

(8897)

## உதயன்

# தமிழ்க் கைதிகளும் கூட்டமைப்பும்

களுத்துறை மற்றும் கொழும்பு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், விடுதலை கோரி மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இது முதன்முறை அல்ல. முன்னரும் எத்தனையோ தடவை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். பலன் இல்லை.

தமிழ்த் தலைவர்களும், சிலசமயங்களில் அரச பிரபலங்களும் சிறைகளுக்குச் சென்று விடுதலைக்கான உறுதிமொழிகளை வாரி வழங்குவார்கள். அவற்றைக்கேட்டு கைதிகள் குளிர்ந்து போவார்கள். சென்றவர்கள் பழரசமோ பச்சைத் தண்ணீரோ கொடுக்க அதை வாங்கிப் பருகி உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்வார்கள். இது மாமூலாகி விட்டது.

ஆனால், இம்முறை சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை வெகுவாக உசுப்பிவிட்டிருக்கிறது. தமிழ்ச் சிறைக் கைதிகளின் விடுதலைக்காக அரசுடன் கடும் போக்கைக் கடைப்பிடிக்கப்போவதாக கூட்டமைப்பு எம்.பிக்களும் முக்கியஸ்தர்களும் அறிவித்திருக்கிறார்கள்; சூடுபறக்கப் பேசியிருக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைக் குழு நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டில் கூட்டமைப்பினர் நெருப்பைக் கக்கினர்.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவைக் கூட்டமைப்பு எம்.பிக்கள் 15 பேரும் ஆதரிக்க வேண்டுமானால் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனே விடுதலை செய்யவேண்டும். இப்படி கடைசி ஆயுதமாக அரசுக்கு நிபந்தனை விதிக்கவும் தயார் என்று செய்தியாளர்கள் மாநாட்டில் கூட்டமைப்பு எம்.பியான ரவிராஜ் கர்ச்சித்தார்.

கூட்டமைப்பினர் மற்றும் பலரும் இதே தொனியில் கருத்துக்களை வெளியிட்டனர்.

அரசு - புலிகள் பேச்சுமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பாகவே 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அரசு கொண்டு வருகிறது. அதனால் அந்தத் திருத்தத்தைப் புலிகளும் ஆதரிக்கிறார்கள்.

அப்படியிருக்க, புலிகள் தேடிக்கொடுத்த மக்கள் ஆதரவுப் பிச்சையால் இன்று நாடாளுமன்ற நாற்காலிகளை அலங்கரிக்கும் 15 தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களும் புலிகளின் விருப்பத்துக்கு மாறாக 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை எதிர்க்கத் துணிவார்களா என்பது வேறு விடயம்.

எது எப்படியிருந்தபோதிலும், சட்ட மற்றும் நீதிமன்ற நடைமுறைகளைக் காரணங்காட்டி தமிழ் அரசியல் கைதிகளை அரசு நீண்டகாலமாகச் சிறையில் அடைத்து வைத்திருப்பதும் அவர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்குவதும் நியாயமா?

இவர்களில் பலர்மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. வெறும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள். இவர்களை உடனே விடுதலை செய்வதற்கு சட்டம் குறுக்கே நிற்கிறது என்றால் அடுக்கடுக்காகப் படுகொலைகள் பலவற்றைச் செய்த ஜே.வி.பியினர் தாம் அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்கிறோம் என்று சொன்னதும் உடனே விடுதலை செய்யப்பட்டார்களே, அது எப்படி? அப்போது சட்டம் எங்கே போனது?

செம்மணி, பிந்துனுவெவ, உடத்தலவின்ன படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் பிணையில் விடப்பட்டார்கள். பலர் பதவியுயர்வுகளும் பெற்றார்களே அது எப்படி?

அரசை எதிர்த்துப் போராடிய புலிகளுடன் அமைச்சர்களும் படைத்தளபதிகளும் கூட இன்று கை குலுக்கிக்கொள்கிறார்கள்; ஒன்றாக இருந்து உணவருந்துகிறார்கள்; உரையாடுகிறார்கள். புலிகளுக்கு உதவினார்கள்; அவர்களைப் பற்றித் தகவல் கொடுக்கத் தவறினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் சிறைகளில் கிடந்து சீரழிகிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது?

எல்லோரையும் உடனே விடுதலை செய்யவேண்டும் என்று அரசு விரும்பினால் சட்டம் குறுக்கே நிற்கமுடியுமா? சட்டத்தை ஆக்கிய அரசால் அதை நீக்கவும்முடியும். அரசுக்குக் கொடுக்க வேண்டிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டியவர்கள் முறையாகக் கொடுத்தால் எல்லாம் நொடிப்பொழுதில் சரியாகிவிடும்.

---

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தீவக லயன்ஸ் கழகம் இணைந்து

# தீவுப் பகுதி மாணவர்களுக்கு யாழ்.நகரில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.3

தீவக லயன்ஸ் கழகமும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து தீவுப் பகுதி மாணவர்களுக்கு கணனி தொடர்பான அடிப்படை அறிவை வழங்கும் செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இதன் அடிப்படையில் வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு தற்போது கணனிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சிகள் யாவும் யாழ்.நகரில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் வைத்தே வழங்கப்படுகின்றன. தீவுப் பகுதியில் இருந்து மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், தீவக லயன்ஸ் கழகமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு கடந்த திங்களன்று வேலணையில் இடம்பெற்றது. தீவக லயன்ஸ் கழகத் தலைவர் ப.தேவநாயகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன ஆலோசகர் எஸ்சிவநாதன், கல்லூரி அதிபர் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர். கணனி அறிவைப் பெறுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து எஸ்.சிவநாதன் அங்கு மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் 50 பேருக்கு வழங்கப்படும் ஐந்து வாரங்கள் இடம்பெறும இப்பயிற்சி நிறைவடைந்ததும், தீவகத்தைச் சேர்ந்த மற்றுமொரு பாடசாலையைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அண்மையில் அறிமுகப்படுத்திய பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சித் திட்டத்தின் கீழேயே இது செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

---

### கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் கவலை

# இந்திய படகுகளின் அத்துமீறலால் தொழிலில் ஈடுபட மீனவர் அச்சம்

## வலைகள், உபகரணங்கள் நாசமாகின்றன

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.குடாநாட்டின் கடல் பிரதேசங்களில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசிப்பதால் எமது பகுதி கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகக் கடலில் தொழில் செய்யமுடியாதுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாதகல் கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்த இந்திய மீன்பிடிப்படகுகள் அப்பகுதியில் கடற்றொழில் ஈடுபட்டதோடு மாதகல் பகுதி மீனவர்களினால் பயன்படுத்தப்படும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதிக்கதிகமான கடற்றொழில் உபகரணங்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைப் பயன்படுத்திப் பல நிறுவனங்களின் நிதி உதவியுடன் கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தமது சமாசம் முன்வந்துள்ளபோதும் இந்திய மீனவர்களின் இத்தகைய செயற்பாடுகளினால் பெருமளவான நிதியை முதலீடு செய்து இத்தொழிலை விருத்திசெய்ய மீனவர்கள் பின்னடிக்கின்றார்கள் எனவும் -

இத்தகைய அத்துமீறல் செயற்பாடுகள் வெற்றிலைக்கேணியில் இருந்து மன்னார் கடற்பிரதேசம் வரையான பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகவும் -

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையிட்டபோதும் இதுவரை எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் - அவர் கவலை தெரிவித்துள்ளார். (ம-5)

---

# யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள மேலும் சில வீதிகளைத் திருத்த நிதி

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள வீதிகள் புனரமைப்புக்கென விசேட அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் பின்வரும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

★ நாவலர் வீதியின் ஒரு பகுதி புனரமைப்பு
(6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா)

★ குருநகர், டேவிட் வீதி புனரமைப்பு
(3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா)

இதேவேளை -

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தினாலும் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள வேலைகள் வருமாறு:

★ யாழ்.பிரப்பங்குளம் லேன் திருத்த வேலை
(2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா)

★ அரியாலை பொதுச்சந்தை புனரமைப்பு
(2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா)

(ஐ-10)

---

# சந்திகளில் கூடுவோருக்கு புலிகள் எச்சரிக்கை!

கரவெட்டி,ஒக்.3

வீதிகள் மற்றும் சந்திகளில் தேவையற்ற முறையில் இளைஞர்கள் மற்றும் யுவதிகளை கூடிநிற்கவேண்டாம் என்று விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வாறு சந்திகள், வீதிகளில் தேவையற்றமுறையில் கூடுபவர்களால் அதிக அளவில் சமூகச் சீரழிவுகளும் ஒழுக்கக் கேடுகளும் அதிகரித்துவருவதாகவும் -

எனவே, இப்படிப்பட்டவர்களை இனங்கண்டு கடும் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் - அவர்கள் தெரிவித்தனர்.

தமது நடவடிக்கைக்கு குந்தகம் ஏற்படுத்தாது இளைஞர்கள், யுவதிகள், மாணவர்களை நடந்துகொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-70)

---

# திக்கம் வடிசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தத்துக்கு முஸ்தீபு!

திக்கம் வடிசாலை ஊழியர்கள் மீண்டும் வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்கான முஸ்தீபில் ஈடுபட்டுள்ளனர்.

தமது நிரந்தர நியமன ஊதியம் கோரி கடந்த மாதம் மேற்படி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கவிருந்தனர். இதுவிடயமாக அமைச்சர் மகேஸ்வரனுக்கும் கடிதம் அனுப்பியிருந்தனர்.

மேற்படி விடயத்தில் தலையிட்ட பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் எஸ்.சிவபாதம் ஊழியர்களின் கோரிக்கைக்குத் தாமும் அமைச்சர் மகேஸ்வரனும் உடன் தீர்வுகாண்பதாக வாக்குறுதி கொடுத்ததன்பேரில் வேலைநிறுத்த முயற்சி கைவிடப்பட்டது.

ஆனால், சென்ற மாத இறுதியில் 15பேருக்கு மட்டுமே நிரந்தர நியமன ஊதியம் வழங்கப்பட்டது. ஏனையோர்களுக்கு இதுவரை எவ்வித நியமனமோ ஊதியமோ வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, பாதிப்புற்ற தொழிலாளர்கள் மீண்டும் இம்மாத முற்பகுதியில் வேலை நிறுத்தத்தில் இறங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-70)

---

### நாளை

புரட்டாதி 18
வெள்ளிக்கிழமை
(04.10.2002)
திதி : திரயோதசி
முன்னிரவு: 10.24 வரை
நட்சத்திரம் : மகம்
காலை 6.08 வரை பூரம்
பின்னிரவு 4.38 வரை
பிரதோஷவிரதம்
சுபநேரம்: 6.02 - 7.32
ராகுகாலம்: 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

---

### உதய வாக்கு

தடாகம் வறண்டதும் பறவைகள் பறந்து சென்றுவிடுகின்றன; சிறகில்லா அப்பாவி மீன்கள் எங்கே போகும்?

---

### ஆளணிப் பற்றாக்குறை, போதிய பஸ்கள் இல்லாமை

# மேலதிக பஸ் சேவைகளை வழங்க முடியாத நிலை!

## யாழ்.சாலை முகாமையாளர் தெரிவிப்பு

வலி.மேற்கு,ஒக்.3

தற்போது நடத்தப்பட்டுவரும் பஸ்சேவைகளுக்கு மேலதிகமாக எந்த ஒரு பஸ் சேவையையும் நடத்தக்கூடிய நிலையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் இல்லை.

- இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை பொதுமுகாமையாளர் எஸ்.நல்லதம்பி தெரிவித்தார். வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

போதிய பஸ்கள் இல்லாமை ஆளணிப் பற்றாக்குறை ஆகிய காரணங்களாலேயே சேவையை விஸ்தரிக்க முடியாத நிலை இருப்பதாகவும் அவர் சொன்னார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிராம அலுவலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், சமநல சேவை நிலைய அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பிரதேசத்தின் சுகாதாரம், கல்வி, மின்சாரம், உணவு விநியோகம் போன்ற விடயங்களும் பிரதேச அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயப்பட்டன. யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டும் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாதம் முடிவடைவதற்குள் அராலி தெற்கு, அராலி கிழக்கு ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படும்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள மீனவர்களுக்கு திணைக்களத்தினால் அடையாள அட்டைகள் மிகவிரைவில் விநியோகிக்கப்படும். (ம-175)

# சாரணர் பயிற்சி முகாம்

சாரண மாணவர்களைப் பயிற்றுவிக்கின்ற சாரணத் தலைவர்களுக்கான அதி உயர் பயிற்சி நெறியான அவத்தை நான்கிற்கான ஒன்பது நாள்கள் வதிவிடப் பயிற்சி முகாம் தமிழ் மொழிமூலம் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் நுவரெலியா பீற்றுாவில் அமைந்துள்ள சாரணர் பயிற்சிப் பாசறையில் ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பு சாரணத் தலைமைக் காரியாலயத்தால் நடத்தப்படுகின்ற இப பயிற்சி முகாமில் பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய சாரண மாவட்டங்களைச் சேர்ந்த 27 சாரணத் தலைவர்கள் பங்குபற்றுகின்றனர். (ம-173-ரி)

## பிரிந்தவரின் பிறந்தநாள் நினைவு

தோற்றம் 03 - 10 - 1933



மறைவு 19 - 04 - 1996

**அமரர் Dr.ஆறுப்பிள்ளை இராசநாயகம்**


*(இளைப்பாறிய உதவி வைத்திய பொறுப்பாளர், அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டம்)*

பாரபட்சமற்ற சேவை செய்த நீங்கள் பிறந்த இப்பொன்னாளை நினைவு கூருகின்றோம்.

*பாணாவெட்டி, தொல்புரம்.* பாசமுள்ள குடும்பத்தினர். (8792)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 12 - 1943



மறைவு 06 - 10 - 1999

**அமரர் இளையதம்பி மயில்வாகனம்**

*(லொறி உரிமையாளர்)*

*ஆண்டுகள் மூன்று கடந்தபிறகும்*
*பிரிவால் துயருறும் உறவுகள்...*

மனைவி : இராஜேஸ்வரி (இலங்கை)
பிள்ளைகள்: ரூபன் (யாழ்ப்பாணம்), ரமேஸ் (சுவிஸ்), தயா (லண்டன்), யசிந்திரன் (கனடா), சுரேந்தினி (ஜேர்மனி), குமுதினி (இலங்கை), பிரிந்தினி (இலங்கை) மற்றும் சறோஜினி, மதுஷா, லஷ்சா, மருமகன், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு. சுன்னாகம்.*
தகவல்: குமுதா, பிரிந்தினி, மதுஷா. (8966)

## நெஞ்சம் மறவாத 27ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 08 - 1917



உதிர்வு 03 - 10 - 1975

திருமதி
**மேரி கிருபையம்மா இராஜக்கோன்**

முத்துக்கு முத்தான அன்னை! - எங்கள்
சொத்துக்குச் சொத்தான அன்னை!
பத்து மாதங்கள் சுமந்தே எம்மில்
பாசத்தை அள்ளிச் சொரிந்த அன்னை!
ஆண்டுகள் பல சென்றாலும்
மறையுமோ உங்கள் நினைவலைகள்?

- அன்புப் பிள்ளைகள்.

*ஏழாலை வடக்கு, ஏழாலை.* (8946) *32. றக்கா லேன்; கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

## சைக்கிள் உரிமத்தகடு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சைக்கிள்களுக்கான உரிமத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

உரிமத் தகட்டினை பெற்றுக் கொள்ளாதோர் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாநகரசபை வருமானக்கிளையில் உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும் -

தவறும் பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் அறிவித்துள்ளார். (ஜ-8)

## கடற்றொழிலாளருக்கு வெளி இணைப்பு இயந்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.3

வடமாகாண கடற்றொழிலாளர் சமாச அங்கத்தவர்களுக்கு கடன் அடிப்படையில் வெளி இணைப்பு இயந்திரம் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் த.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் 'யமஹா' நிறுவனப் பொது முகாமையாளர் ரஞ்சித் சில்வா, மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவுசெய்யப்பட்ட 25 கடற்றொழில் பயனாளிகளுக்கு வெளி இணைப்பு இயந்திரங்களை வழங்குவர்.

இதேவேளை -

செலான் வங்கியின் அனுசரணையுடன் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு கடன் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது பற்றிய கலந்துரையாடல் அன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஜ-5)

# கலை, கலாசாரத்தை வளர்க்க மாதாந்தக் கலை நிகழ்வுகள்

தமிழர்களின் கலை, கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்கில், அவற்றை வெளிப்படுத்தும் வகையிலான கலை நிகழ்வுகளை மாதாந்தம் நடத்துவதென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் தீர்மானித்துள்ளது.

இந்நிகழ்வுகளை குறிப்பாக யாழ். நகரின் கரையோரப் பிரதேசங்களில், அவ்வப் பகுதிகளில் உள்ள சமூக மேம்பாட்டு அமைப்புகளின் உதவியுடன் நடத்துவதெனவும் சமாசம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற, வலிகாமம் பிரதேச மீனவர்களுடனான சந்திப்பின்போதே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கலை நிகழ்வுகளை நடத்துவதற்கான பூரண ஒத்துழைப்பை, சமாசம் வழங்கவுள்ளது. (ம-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை**



5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 122 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**செல்வி தேவராசா தாட்சாயனி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு கல்வி கற்பித்து வழிகாட்டிய பாடசாலை அதிபர் திரு.க.இரட்ணேஸ்வரன் அவர்களையும், ஆசிரியர் அவர்களையும் மற்றும் செல்வி ந.சுஜிதா அவர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

- அப்பா, அம்மா, அத்தான், அக்காமார், அண்ணா, உறவினர்.

*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.* (8667)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ம.கணேசமூர்த்தி அவர்களது அன்புத் தந்தையார்

**ஆறுமுகம் வேலுப்பிள்ளை**

(கொடிகாமம் பிறப்பிடம், வவுனிக்குளம் வசிப்பிடம்)

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்,
மந்துவில், கொடிகாமம்.

(8969)


# Canadian College of Business & Computers

Offers
$4 Million
in Scholarships
to study in Canada



CCBC

**Scholarships will be awarded as follows:**

10 Awards of Partial Tuition CDN $ 17,000 each
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each

Scholarship application forms are available at:
24, Temple Lane,
Colombo 3,
Sri Lanka.
Tel: 507176

The deadline for receipt of completed applications is October 10th, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address from 5th to 10th October 2002

Scholarship Application & Admission
Canadian College of Business & Computers
Room 26-02
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Copy of your Passport
3. Copy of your Birth Certificate
4. Copy of your Educational Certificates/Transcripts
5. Employment Letter (if any)
6. Proof of sufficient funds for living expenses for two years – (US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000, depending on the scholarship award you would receive
7. Fee of US $ 13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

**Aptitude Test**
Date: October 12th and 13th
Time: 10:00 am to 4:00 pm

**Interview**
Date: October 14th
Time: 10:00 am to 4:00 pm

**Location**
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

Ready for the challenge? Welcome to Canada for your studies.

Contact Person: Meena Thyagarajan
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1-416-413-1234
fax: 1-416-413-0314
e-mail: meena@ccbc.ca

"Education is the foundation of Human Development, Security and PEACE"

WWW.CCBC.CA

# மாணவர்கள் தனியார் கல்வியில் தங்கியிருக்கும் நிலை மாறவேண்டும்

## செங்குந்த இந்து பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் உரை

மாணவர்கள் தனியார் கல்வித் துறையில் முற்றுமுழுதாகத் தங்கியிருக்கும் நிலைமை மாறவேண்டும்.

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினம் மற்றும் பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு பிராந்திய தொலைத்தொடர்பு முகாமையாளர், பொறியியலாளர் வி.யோகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

முன்பெல்லாம் பாடசாலைக் கல்விக்கு மகத்துவம் இருந்தது. சிறப்பாக சித்தியடைந்தவர்களிடம் கேட்டால் தமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களின் பெயர்களையும், படித்த நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களையும்தான் சட்டென்று கூறுவார்கள். இப்போது ரியூட்டரி கல்விதான் முதன்மை பெறுகிறது. இந்த நிலைமை மாறவேண்டும். பாடசாலைக் கல்வியின் மகத்துவம் உணரப்படவேண்டும் - என்றார்.

கல்லூரி அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக் கழக உதவிப் பதிவாளர் வ.ஸ்ரீதரன் நிறுவுநர் நினைவாக உரையாற்றினார்.

இன்று இப்பாடசாலை அமைந்திருக்கும் இக்காணி அக்காலத்தில் 'பண்டாரிவளவு' என்ற பெயருடன் இருந்திருக்கின்றது. இது கொண்டலடி வைரவர் கோவிலுக்கு தர்ம சாதனமாக வழங்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் இங்கே ஒரு சங்கம் இப்பகுதி மக்களால் நிறுவப்பட்டிருந்தது. இதனை மக்கள் சங்கமடம் என்று அழைத்து வந்துள்ளனர். இச்சங்கம் அக்காலத்தில் 'கந்தவாச மண்டபம்' எனப் பெயரிடப்பட்டிருந்தது. இச்சங்க மடத்தில் கூடும் பெரியோர்களின் முன் முயற்சியினால் 1934 ஆம் ஆண்டு இப்பாடசாலை உருவாகும் நிலை ஏற்பட்டது. 1934 ஆம் ஆண்டு இதே நாளில் கொண்டலடி வைரவர் கோவிலில் தாமகர்த்தா சோதிட வைத்தியர் இளையதம்பி சாஸ்திரியவர்களால் இக்காணி கையளிக்கப்பட்டு இந்து போட் இராஜரட்ணம் அவர்களால் இப்பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலை ஆரம்ப நாள் விஜயதசமி நாளாக இருந்தமை மிகவும் சிறப்பானதாகும் - என்று அவர் தனது நினைவுரையில் குறிப்பிட்டார்.

கல்லூரியில்25 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியை ப.தில்லைநாதன் பொன்னாடை போர்த்து, விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கல்லூரி நிறுவுநரின் உறவினரான சி.இராஜேஸ்வரனும் கௌரவிக்கப்பட்டார்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி பிறேமாவதி யோகேந்திரன் வழங்கினார். யாழ்.பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவிகளுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

விழாவின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஜ-ரி)

### பாடசாலைகளில் ஒழுக்கம் சீர்குலைவு

# கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி கடிதம்

பாடசாலைகளைப் பொறுத்தவரை ஒழுங்கு பெருமளவு சீர்குலைந்திருப்பதால் அது குறித்து ஆராய ஒரு குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கல்வியமைச்சரைக் கோரியிருக்கிறார். கல்வியமைச்சின் செயலாளர் தலைமையில் இக்குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

பாடசாலைகளில் ஒழுங்கு சீர்குலைந்திருப்பது குறித்து ஆராய்ந்து, கடந்த காலங்களில் நடைபெற்றதைப் போன்ற சம்பவங்கள் பாடசாலைகளில் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி சந்திரிகா கல்வியமைச்சரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பாடசாலைகளில் முன்னர் நடைபெறாத சம்பவங்கள் இப்பொழுது நடைபெற்றிருக்கின்றன. பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் மோதல்களில் உடமைகளுக்கும் சேதங்கள் விளைந்திருக்கின்றன. கிரியெல்ல, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய இடங்களில் உள்ள சில பாடசாலைகளிலும் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க, ஆனந்த போன்ற கல்லூரிகளிலும் இடம்பெற்ற மோதல்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வாறு ஜனாதிபதி கல்வியமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# யாழ். ஆஸ்பத்திரி கன்ரீனில் நேற்றுமுன்தினம் சோதனை

## சுகாதாரச் சீர்கேடான பொருள்கள் அழிக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.போதனா வைத்தியசாலை கன்ரீனில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு நேற்றுமுன்தினம் நடத்திய திடீர் பரிசோதனையின்போது அங்கு சுகாதாரச் சீர்கேடான முறையில் வைக்கப்பட்டிருந்த அனைத்து உணவுப் பொருள்களும் உடனேயே கொட்டி அழிக்கப்பட்டன.

யாழ்குடாநாட்டில் தற்போது பரவி வரும் கொலராவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில, யாழ்.மாவட்டத்தை உள்ளடக்கிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஒன்றிணைந்து, ஒருகுழுவாக இயங்கி, யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கி வரும் தேநீர், உணவு நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். சுகாதாரச் சீர்கேட்டுக்குரிய முறையில் விற்பனை செய்யும் உணவுப் பண்டங்களை அவர்கள் உடனேயே அழித்து வருகின்றனர்.

இந்த வரிசையில் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற இக்குழு போதனா வைத்தியசாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் கூட்டு முயற்சியில் இத்திடீர்ப் பரிசோதனையை நடத்தி, சுகாதாரத்தைப் பேண நடவடிக்கை எடுத்தனர்.(ம-9)

### முதியோர் தினவிழா

தென்மராட்சி,ஒக்.3

தென்மராட்சி பிரதேச செயலக முதியோர் தினவிழா ஒக்ரோபர் ஏழாம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதியோர் தினத்தையொட்டி தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இந்நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படுமெனவும் கடந்த வருடம் நடத்தப்பட்ட முதியோர் தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் இந்த நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ம-117)

# ஏழு தமிழ் நூல்களுக்கு சாகித்திய விருது!

கடந்த ஆண்டின் சிறந்த இலக்கியப்படைப்புகளுக்கான விருதுகளை வழங்கும் 2002 அரச சாகித்தியவிழா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த 46ஆவது சாகித்திய விழாவை கலாசார அமைச்சின் அனுசரணையுடன் கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் வெளியான சிறந்த படைப்புகளுக்கு விருதும், பணப்பரிசும் வழங்கப்பட்டன.

விருதுகளை 16சிங்கள எழுத்தாளர்களும், 7தமிழ் எழுத்தாளர்களும், 5ஆங்கில எழுத்தாளர்களும் பெற்றுக்கொண்டனர்.

இம்முறை முதன்முதலாக 'சாகித்திய ரத்ன' இலக்கிய விருது இருவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ் இலக்கியவாதிக்கான 'சாகித்திய ரத்ன' விருதை டி.எஸ்.வரதராஜன்(வரதன்) பெற்றுக்கொண்டார்.

சிங்கள இலக்கியத்திற்கு சிறப்புப் பணியாற்றிமைக்காக எம்.பி.ஆரயபாலவும் 'சாகித்திய ரத்ன' விருதைப் பெற்றுக்கொண்டார்.

மேலும், அல் - அகமத் எழுதிய 'வெள்ளை மரம்' (சிறுகதை), கந்தையா ஸ்ரீகணேஷனின் 'நிதர்சனத்தின் புத்திரர்கள்'(நாடகம்), ரீ.எல்.ஜௌபர்கான் எழுதிய 'மௌன தேசம்' (கவிதை), எல்.முருகபூபதியின் 'பறவைகள்'(நாவல்), எஸ்.அருளானந்தனின் 'மனதுக்கினிய பாட்டு'(சிறுவர் இலக்கியம்), பேராசிரியர் எஸ்.பத்மநாதனின் 'இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்' (ஆராய்ச்சி நூல்), எஸ்.பத்மநாதன் எழுதிய 'ஆபிரிக்க கவிதைகள்' (மொழிபெயர்ப்பு) ஆகிய தமிழ் நூல்கள் இவ்வாண்டுக்கான சாகித்திய விருதுகளையும், பணப்பரிசுகளையும் பெற்றுக்கொண்டன. (ஐ)

# நான்காயிரம் இலங்கையர்களுக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

கொழும்பு,ஒக்.3

கொரிய அரசு 4ஆயிரம் இலங்கையர்களுக்கு கொரியாவில் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இவற்றிற்கான விசாக்கள் அடுத்தமாதம் தொடக்கம் வழங்கப்படும் என்று கொரியத் தூதுவர் லீ நம் சூ தெரிவித்தார்.

இலங்கைக்கும் தென் கொரியாவிற்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளன. இது தொடர்பான வைபவமொன்றில் தூதுவர் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

கொரியத் தூதுவர், அமைச்சர் அப்துல்காதருடன் அவரது கூட்டுறவு அமைச்சு அலுவலகத்தில் நேற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து கொரிய அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் அமைதி காரணமாகப் பெரும் எண்ணிக்கையான கொரிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்துள்ளனர்.

இலங்கையிலுள்ள கொரியக் கம்பனிகள் 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன.

இப்படி கொரியத் தூதுவர் கூறினார். (ஐ)

# பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்து

கொழும்பு,ஒக்.3

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றில இலங்கை அரசும் கைச்சாத்திடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்திலும், பெண்கள் மீதான பாரபட்சங்களைத் தவிர்க்கும் வகையிலும் இது தொடர்பான சர்வதேச ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பிரேரணை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவால் கடந்த மாதம்25 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. (ம-9)

### ஸ்ரீஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில்

# 200 தாதிமார் ஒரேயடியாக சேவையிலிருந்து விலக முடிவு!

கொழும்பு,ஒக்.3

கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் பணியாற்றும் தாதிமார்களில் 200 இற்கும் மேற்பட்டோர் சேவையிலிருந்து வெளியேறுவதெனத் தீர்மானித்திருக்கின்றனர். இதற்கான கடிதங்களை வழங்கியிருக்கும் அவர்கள் நேற்றுமுன்தினம் கடமைக்கு வரவில்லை.

இதனால் வைத்தியசாலை நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்; சேவைகளில் பாதிப்புகள் ஏற்பட்டன.

வைத்தியசாலையில் கொந்தராத்து அடிப்படையில் சேவையாற்றும் தாதிமார்களின் சேவையை நீடிக்கும் பொழுது சம்பளத்தில் 50 சதவீதத்தைக் குறைக்க வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்ட தீர்மானத்தை ஆட்சேபித்தே அவர்கள் சேவையிலிருந்து வெளியேறுவதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் 400 இற்கு மேற்பட்ட தாதிமார்கள் கடமையாற்றுகின்றனர். அவர்களில் 200 இற்கு மேற்பட்டோர் கொந்தராத்து அடிப்படையிலேயே சேவையாற்றுகின்றனர். (ஐ)

### வெடிபொருள் அபாயம் காரணமாக

# நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் வடமராட்சி, தென்மராட்சியில் முடக்கம்

## உலக உணவுத் திட்ட உதவியுடன் மேற்கொள்ளப்படவிருந்தது

உலக உணவுத் திட்டத்தினால் தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவிருந்த நீர்ப்பாசனம் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் கண்ணிவெடி அபாயம் இருப்பதாகக் கூறப்பட்டதன் காரணத்தாலேயே இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் காலன் கோட்டைக்குளம் (சாவகச்சேரி), அடம்பிக்குளம் (சாவகச்சேரி), வேருவில்குளம் (சாவகச்சேரி), கும்பிட்டான்குளம் (சாவகச்சேரி), சாலம்பைக் குளம் (மருதங்கேணி), வத்திராயன்குளம் (மருதங்கேணி), மாவில்காரவில் வாய்க்கால் (சாவகச்சேரி), உவர்நீர்த்தடுப்பணை (கைதடி மேற்கு) ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிந்தன. இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளும் ஆரம்பிக்கப்படவிருந்தன.

இப்பகுதியில் வெடிப்பொருள்களின் அபாயம் இருப்பதன் காரணமாக இந்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டாம் என உலக உணவுத் திட்டத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று உலக உணவுத் திட்ட அதிகாரிகளுக்கும் மிதிவெடி செயற்பாட்டுத்திட்ட அதிகாரிகளுக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ளது. (ம-10-31-117)

### பொதுமக்கள் பாவனைக்கு கிணறுகள் அமைப்பு

வடமராட்சி,ஒக்.3

பொது மக்களின் வசதிகருதி வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் இரு கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

குடத்தனை வடக்கிலுள்ள பொது மயானத்தின் தேவைக்காக அங்கு ஒரு கிணறும், இதே பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் குடியிருப்புப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு ஒரு கிணறும் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. (ம-173)

# ஜனாதிபதியின் அநுராதபுர கூட்டத்தில் கலந்துகொள்ளாத பொ.ஐ.மு. எம்.பி.!

கொழும்பு,ஒக்.3

அநுராதபுரத்தில் கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற பொ.ஐ.முன்னணி கூட்டமொன்றில் அநுராதபுரம் மாவட்ட பொ.ஐ.மு. எம்.பி. எஸ்.எம்.சந்திரசேன பங்குபற்றவில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இக்கூட்டத்தில் பிரதான அதிதியாகக் கலந்துகொண்டார்.

முன்னணியின் ஒரு சிலரால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனக்கூறியே அவர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று அறியப்படுகிறது.

இந்த அச்சுறுத்தல் குறித்து சந்திரசேன எம்.பி.ஏற்கனவே கடிதம் மூலம் ஜனாதிபதியிடம் அறிவித்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது. தொலைபேசிமூலம் தனக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி கலந்துகொண்ட இக்கூட்டத்துக்கு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. (ஐ)

# பட்டமளிப்பு அங்கிகளுக்கு இந்த முறையும் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெறவுள்ளோருக்கான பட்டமளிப்பு அங்கிகள் பற்றாக்குறையாக உள்ளன. அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்டபோது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான அங்கிகளே தம்வசம் இருந்ததாகவும், முதலில் வந்தவர்களுக்கு அவையாவும் வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அன்றைய தினம் முதல் அமர்வுகளில் பட்டம் பெறுவோரின் அங்கிகளை மீளப்பெற்று ஏனையோருக்கு வழங்க வசதி செய்யப்படும் என்று நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் சுமார் 950 பேர்வரையில் பட்டங்களைப் பெறவுள்ளனர். 800 பேருக்கு வழங்கக்கூடிய அங்கிகளே தற்பொழுது பல்கலைக்கழக நிர்வாகத்திடம் உள்ளன. இது தொடர்பாக பல்கலைக்கழக உயர்பீடத்திடம் பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்ட போதும் இன்றைவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போதும் அங்கிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. (ஜ-10-5)

# என்னைக் கவர்ந்த யாழ்ப்பாணம்!



**ஸ்ரீலங்காவின் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரரான ருமேஷ் களுவிதாரண சர்வதேச சிறுவர் தினத்தன்று சிறுவர்களை உற்சாகப்படுத்தி மகிழ்வூட்ட யாழ்ப்பாணம் வந்திருந்தார். 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் உலகக் கிண்ணம் இலங்கைக்குக் கிடைத்ததற்கு முக்கிய காரணியாக விளங்கியவர் ருமேஷ் களுவிதாரண. அவருடன் உரையாடியபோது கிடைத்த தகவல்களின் தொகுப்பை இங்கு தருகிறோம்.**

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிரடி ஆரம்பத்தை மேற்கொண்டு எதிரணியினரைத் திக்குமுக்காடச் செய்தவர்கள் ஸ்ரீலங்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜயசூரியாவும் ருமேஷ் களுவிதாரணவும் ஆவர். 1996இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் உலகக் கிண்ணத்தை ஸ்ரீலங்கா கைப்பற்ற முக்கிய காரணமாக விளங்கியவர்களும் இவர்கள் இருவருமே. போட்டி ஆரம்பமாகி முதல் 15 ஓவர்கள் வரையும் இரு களத்தடுப்பாட்ட வீரர்கள் மட்டுமே உள்வட்டத்திற்கு வெளியே களத்தடுப்பை மேற்கொள்ளலாம் என விதியுண்டு. இந்தப் 15 ஓவர்களில் பந்தைத் தூக்கி அடித்தால் களத்தடுப்பாளர்கள் இல்லாத நிலையில் ஆட்டமிழக்க வாய்ப்புக்கள் குறைவு. அதேநேரம் அவ்வாறு அடிக்கப்படும் பந்து எல்லைக் கோட்டைக் கடக்கவும் எல்லைக் கோட்டிற்கு மேலாகச் செல்லவும் வாய்ப்புக்கள் உள்ளன. இந்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அணிக்கு நல்ல பல ஆரம்பங்களை வழங்கியவர்கள் சனத் ஜெயசூரியாவும் ருமேஷ் களுவிதாரணவும் என்றால் அது மிகையாகாது.



துடுப்பாட்டத்தில் துரிதமாக ஓட்டங்களைச் சேர்ப்பதுபோலவே ருமேஷ் களுவிதாரண விக்கெட் காப்பாளராகவும் துடிதுடிப்பாகச் செயற்படுவார். சக வீரர்களை உற்சாகப்படுத்துதல் பந்துகளைச் சேகரித்தல், துடுப்பாட்டக்காரர்களை ரன் அவுட் மற்றும் ஸ்ரம் செய்து ஆட்டமிழக்கச் செய்தல ஆகியனவற்றில் களுவுக்கு நிகர் களுவேதான்.

ஸ்ரீலங்கா அணியில் களுவால் நிரந்தரமான இடத்தைப் பிடிக்கவும் முடியவில்லை. தேர்வாளர்களால் களுவை முற்றாக நிராகரிக்கவும் முடியவில்லை. ஸ்ரீலங்கா அணியில் இடம்பெற்றாலும் இடம்பெறாவிடினும் அவர் தொடர்ந்தும் திறம்பட விளையாடி வருகிறார் என்பதற்கு கடந்த பருவத்தில் முதல் தரக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் தனது அணிக்கு அவர் குவித்த சதங்கள் சாட்சி பகரும்.

ஸ்ரீலங்கா அணிக்கு எந்த நேரத்திலும் களுவின் சேவை தேவைப்படலாம். அதேபோல ஸ்ரீலங்கா அணிக்கு தனது சேவை தேவைப்படும்போது அதனை வழங்கவும் தயாராயிருக்கிறார் களு.

கடந்த மாதம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஜனசக்தி அணியின் வீரராக விளையாட வந்தபோது தனது மனைவியுடனும் மகனுடனும் களு வந்திருந்தார். சர்வதேச சிறுவர் தினத்தன்று யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர்களைச் சந்தித்து உற்சாகமூட்டுவது என சக்தி எவ்.எம். சேவையினர் தீர்மானித்தபோது தனது விருப்பத்தைத் தெரிவித்ததுமல்லாமல் அன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கூடிய அத்தனை சிறுவர்களுடனும் களு கலந்துரையாடினார் - சேர்ந்து விளையாடினார் - ஓட்டோகிராப்களில் மகிழ்ச்சியுடன் கையொப்பமிட்டார். கிரிக்கெட் அணியுடன் மீண்டும் யாழ்.வந்து விளையாடவுள்ளதாகக் களு தெரிவித்தார். களுவுடன் உரையாடியபோது, அவர் அளித்த பதில்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

கடந்த சில வாரங்களாக களு, விளையாட்டுக் கழகத்தில் பயிற்சிகளைப் பெற்றுவருகின்றார். இதைவிட உள்ளக கிரிக்கெட் போட்டிகளிலும்(Indoor Cricket) பயிற்சிபெற்று வருகிறார்.

தேசிய அணியில் மீண்டும் இடம் பிடிப்பதே களுவின் நோக்கமாகும். இந்த நோக்கத்திலேயே அவர் பயிற்சிகளைத் தொடர்ந்துவருகிறார். "முதலில் தேசிய அணியில் மீண்டும் இடம்பிடிக்கவேண்டும். அதன் பின்னர் அந்த அணியில் நிலையான இடத்தைப் பிடிக்கவேண்டும்" இதுவே தற்போது களுவின் முக்கிய நோக்கமாகும்.

"என்னிடம் ஏதோ குறைபாட்டைக் கண்டே தேர்வுக்குழு என்னை அணியில் சேர்க்கவில்லை. அந்தக் குறைபாட்டை இனங்கண்டு அதை நிவர்த்தி செய்து மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிப்பேன்" என்ற திடமான நம்பிக்கையைக் களு கொண்டுள்ளார்.

உள்ளக கிரிக்கெட் போட்டிகளில் முக்கியஸ்தராக விளங்கும் களுவிடம் உள்ளக கிரிக்கெட்(இலங்கை) தரம் குறித்து விசாரித்தபோது ஸ்ரீலங்கா மிகவும் உயர்மட்டத்தில் உள்ளது. உள்ளக கிரிக்கெட் போட்டிகளில் ஸ்ரீலங்கா அணி, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்திய அணிகளை வெற்றிகொண்டுள்ளது என்றார் களு.

இன்னும் 5 மாதங்களில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணியின் சார்பில் விளையாடுவீர்களா? என வினவியபோது, "நான் கட்டாயமாக அணியில் இருப்பேன்" என்றே எதிர்பார்க்கின்றேன் எனக் களு தெரிவித்தார். "உலகக் கிண்ணப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளன. இலங்கை அணியுடன் கடந்தமுறை தென்னாபிரிக்கா சென்றபோது நான் 4 அரைச் சதங்களை அடித்துள்ளேன். எனக்கு தற்போது 32 வயதாகிறது. இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகள் என்னால் சிறப்பாக விளையாட முடியும். இன்னும் பல ஆண்டுகள் விளையாட எனது உடல்நிலை ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை உண்டு எனக் களு தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தைத் தன்னுடன் வந்த நண்பர்களுக்குச் சுட்டிக்காட்டி கடந்த மாதம் அந்த மைதானத்தில் தான் விளையாடியதை நினைவுகூர்ந்தார்.

**ஆகாரஷ்**

யாழ்ப்பாணம் தன்னைக் கவர்ந்துவிட்டதாகப் பெருமையுடன் கூறும் களு, சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் யாழ்.வந்து யாழ்.ரசிகர்களை மகிழ்விப்பேன் எனக்கூறினார்.

ருமேஷ் களுவிதாரண கொழும்பிலுள்ள முன்னணி கிரிக்கெட் கழகமான கோல்ட்ஸ்(Colts) அணிக்காகக் கடந்த பல வருடங்களாக விளையாடிவருகிறார்.

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டிகளில் களு மீண்டும் ஸ்ரீலங்கா அணியில் இடம்பெறுவாரா? ஜெயசூரியாவுடன் இணைந்து அதிரடி ஆட்டத்தின்மூலம் ஸ்ரீலங்காவுக்கு மீண்டும் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுத்தருவாரா? என்பதை அறிய அதிக காலம் நாம் காத்திருக்கத் தேவையில்லை. இன்னும் 5 மாதங்களில் இவற்றிற்கு விடைதெரியும். ★

# குடி எனும் நச்சு விருட்சத்தை அழித்து புதுயுகம் படைப்போம்

**உலக மது ஒழிப்பு தினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இன்றைய தினம் ஒரு சர்வதேச விழிப்புணர்வுத் தினமான 'உலக மது ஒழிப்புத்தினம்' ஆகும். இன்று நாம் இருக்கின்ற காலத்தில் இத்தினம் மிகவும் முக்கியமானதாகின்றது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது எம்மத்தியில் பழுத்துக் கனிந்த ஒரு பழமொழி. நோய் என்றால் மனிதர்கள் அனைவருக்குமே அடிமனதிலேயே ஓர் அச்சம் ஏற்படுவது இயல்பானது. நோய் என்றதும் எம் எண்ணத்தில் காய்ச்சல், தலைவலி, புற்றுநோய், உயர்குருதியமுக்கம் எல்லாவற்றுக்கும் கிரீடம் வைத்தாற்போல் எயிட்ஸ் எனப் பலதரப்பட்ட நோய்கள் தோன்றுகின்றன. அவற்றைவிட, உளரீதியான தாக்கங்களால் உருவாகின்ற உளநோய்கள், விரக்தி கள், இயலாமை, ஏக்கங்கள் என்பவை கூட நோய் என்ற எண்ணக்கருவில் உள்ளடக்கப்படுகின்றன.

ஒருவன் உடல், உள, சமூக ரீதியிலான பரிபூரணத்துவத்தைக் கொண்டிருக்கும்போது அவன் சுகதேகியாகின்றான். ஆனால், எம்மில் யார் உடல், உள, சமூக ரீதியிலான பரிபூரணத்துவத்துடன் இருக்கிறோம். எதிலுமே பூரணத்தை அடையாத எமமில் பரிபூரணத்துவம் என்பதை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? தனிமனிதன் ஒருவனுடைய வாழ்க்கையில் உடல் நலம், உளநலம், சமூகநலம் என்பவை செல்வாக்குச் செலுத்துகின்றன. இன்றைய காலகட்டத்தில் மனிதன் எதிர்நோக்குகின்ற சவால்கள் எண்ணற்றவை. மனிதனது சுகநிலையைப் பேணுவதில் பல சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. மனிதனால் உருவாக்கப்பட்டவை அவனுக்கே சவால்களாக உருவெடுத்துள்ளன. தீட்டிய மரத்திலேயே கூர்பார்ப்பதுபோல் மனிதனால் உருவாக்கப்பட்டவையே மனிதனை எதிர்த்துவரும்போது அவற்றை எதிர்த்துநின்று முறியடிக்கவேண்டும். ஓசோனில் ஓட்டை, சுவாசிக்கும் $O_2$ இல் $CO_2$, குடிக்கின்ற நீரில் வைரஸ்கள், உண்ணும் உணவில் உயிர்கொல்லி மருந்துகள் வளங்களின் அருந்தல், சமூக சீர்கேடுகள், குளோனிங்.. என சவால்கள் பல. இப்படியான பல சவால்களில் மனிதனை கொடூரமான முறையில் அணுவணுவாக அழிக்கும் வல்லமை பெற்றது மதுப்பாவனை.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் அனைத்தையுமே முன்னேறவிடாமல் வல்லரசுகளிடம் வலுவின்றி அடக்கவைக்கின்ற காரணியாக மது அரக்கன் வல்லமை பெற்றுள்ளான். மேலே கூறிய சவால்களை எதிர்நோக்கும்போது மனிதன் தன்நிலையில் இருக்கின்றான். ஆனால், குடிபோதை மனிதனை உணர்வற்றவனாக்கிவிடவே மெல்லமெல்ல முயல்கின்றது. மனிதனை உணர்விழக்கச் செய்து அடிமையாக்குகின்ற குடிபோதை மிகவும் பொல்லாதது. இலங்கை போன்ற பொருளாதாரக் கட்டமைப்பையுடைய பல வளர்ந்துவரும் நாடுகளின் ஆயுள் எதிர்பார்ப்பை எடுத்து நோக்கினால் ஆண்களின் ஆயுள் எதிர்பார்ப்பைவிட பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு சில வருடங்கள் கூடுதலாகவே உள்ளது. இதற்குப் பல மருத்துவரீதியான காரணங்கள் இருந்தாலும்கூட ஆண்கள் குடித்துக்குடித்து விரைவில் மரணத்தை அரவணைப்பது கண்கூடு. சில பெண்களும் குடிக்கிறார்கள். ஆனால், ஒப்பீட்டளவில் அது புறக்கணிக்கத்தக்கது.

எங்கள் சமூகத்தில் ஆண்களின் அதிகாரங்கள் பெண்களைவிட அதிகமானவை. எங்களுடைய பண்பாட்டுக் கோலம் மரபு வழியாக இவ்வாறு அமைந்துள்ளது. ஆனால், ஆண்கள் இவ் அதிகாரங்களைக் குரங்கின் கைப்பூமாலைபோல் பயன்படுத்துவதன் விளைவு முழு சமூகத்தையுமே பாதிக்கின்றது. ஆண்கள் எதையும் செய்யலாம் என்ற சுதந்திரம் மது பாவனைக்கு அவர்களை அடிமையாக்கியுள்ளது. மட்டுமன்றி பன்றியுடன் சேர்ந்து கன்றும் .... தின்னும் என்பது போல் பெண்கள், சிறுவர்கள் என அனைவரையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது.

குடிபோதை உடலில் சில ஓமோன்களின் சுரப்பைக் கூட்டுகின்றது. இதனால், உடலிற்கும், உள்ளத்திற்கும உற்சாகமாக இருக்கும். இவையெல்லாம் குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட சில நேரத்திற்கு மட்டுமே. ஓமோன்களின் சுரப்புக் கூடுவதனால் உடலின் ஒரு சீர்திடநிலை சீர்குலைகின்றது. ஓமோன்கள்கூட நாளடைவில் செயலிழக்கின்றன. நரம்புத்தளர்ச்சி ஏற்படும். குடிப்பவர்கள் உடலின் உறுதியை, ஆரோக்கியத்தைப்பேண போஷாக்கான உணவுகளை உண்ண வேண்டும். ஈரலின் தொழிற்பாடு நாளடைவில் பாதிக்கப்படுவதால் பசியின்மை ஏற்படும். உணவு உட்கொள்ளாமல் இருக்க ஏனைய பகுதிகளுக்கான ஊட்டம் கிடைக்காமல் போசனைக் குறைபாட்டு நோய்கள் உருவாகின்றன. இவ்வாறானவற்றுடன் விபத்துக்கள் மிகவும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

மேற்கூறப்பட்ட உடல் ரீதியான தாக்கங்கள் குடிப்பவர்களுக்கே உரித்தானவை. ஆனால், உளரீதியான பாதிப்புக்களை ஆற்றிவிடமுடியுமா? எங்களுடைய சமூகம் எவ்வளவு பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றது. சில வருடங்களாக. எம்சமூகத்தின் எழுச்சிக்காக வித்தாக மண்ணுள் விழுகின்ற தியாக நெஞ்சங்கள் எம்மைவிட்டு சிலமைல் தொலைவாகிப்போன காலத்தில் நாம் தொலைத்தவை எத்தனை? விலை பேசியவை எத்தனை? இழந்தவை எத்தனை? நாம் அடிமையாகிவிட்ட விடயங்கள் கூட பலதான். அதில் ஒன்றுதான் கசிப்பு. குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு தான் கசிப்பு. யாழ்ப்பாணத்தினுள் சில மைல் தூரம் பின் சென்று பாருங்கள். பல கிராமங்களில் கசிப்பின் பிடியில் சிதைகின்ற சிறுவர்கள் எத்தனைபேர்? குடும்பம் என்ற உலகின் அடிப்படை ஆக்கக்கூறு இங்கு உருக்குலைந்து, குடிபோதையால் கொலை, கொள்ளை, கோஷ்டி மோதல் என எம் பண்பாட்டையெல்லாம் விலைபேசி நிற்கும் காட்சிகள் மிகவும் கொடூரமானவை. கடந்த காலங்களில் யுத்தங்களால் எம் உள்ளங்களில் ஏற்பட்ட ரணங்களைவிட குடிபோதையால் சீரழியும் எம் சமூகத்தில் ஏற்படும் ரணங்கள் மோசமானவை. நாளைய விதியை நிச்சயிக்கப் போகின்ற இளைய சமுதாயம் பிஞ்சிலேயே பஞ்சாய்ப் பறப்பது காலத்தின் சதிதானா? பல கிராமங்களில், பல்லாயிரக் கணக்கான குடும்பங்களில் சிறுவர், பெரியவர் என்ற பாரபட்சமின்றி குடித்து வெறித்து இருப்பதே வாழ்க்கையென்றாகிவிட்டது.

ஐரோப்பிய நாடுகளில் எல்லாம் இது சர்வசாதாரணமாக உள்ளது தானே. எனவே, நாங்களும் பின்பற்றலாம் என்ற உளநோக்குடையவர்கள் எம்மில் பலருள்ளனர். ஒரு விடயத்தில் தெளிவு பெறவேண்டும். அந் நாடுகளின் பொருளாதார வளம் எம்மிடம் உள்ளதா? எங்களுக்கும் அவர்களுக்கும் எத்தனை இடைவெளி என்று சிந்தித்தீர்களா?

படித்தவர்கள் சமூகத்திற்கு முன் மாதிரியாக நடக்கவேண்டும். குடிப்பதற்காகச் செலவிடும் பணத்தை ஒரு நேரம் சாப்பிட வழியில்லாமல் இருக்கின்ற பிள்ளைகள் எத்தனை பேர் உள்ளார்கள்? அவர்களுக்குக் கொடுக்கலாம் தானே?

அந்தஸ்துக்காகக் குடிக்கின்றேன என்பவர்களே! அமெரிக்கன், ரஷ்யன் எல்லாரும் எத்தனை எத்தனை கண்டுபிடிப்புக்களை உலகமக்களின் நன்மைக்கென கண்டுபிடித்துள்ளார்கள். "அவர்களைப்போல் நாமும் குடிக்கின்றோம்" என்று கூறும் அறிவாளிகளே! நீங்கள் எத்தனை ஆராய்ச்சிகள் செய்தீர்கள்? அதில் எத்தனை உங்களுக்கு வெற்றியளித்தது? எனவே இந்த விடயத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளைப் பின்பற்ற விரும்புபவர்கள, அறிவு, ஆய்வுகள், நெகிழும் மனப்பாங்கு, விண்வெளி பற்றிய ஆய்வுகள் என்ற ஆக்கபூர்வமான விடயங்களில் ஏன் அவர்களைப் பின்பற்ற விரும்புவதில்லை.

"தான் வாழும் நாட்டில் அதற்கான வளம் இல்லை, வசதி வாய்ப்புக்கள் இல்லை" என்று கூறுவீர்கள். எங்கள் நாடு அந்நிலையை அடைவது எப்போது? இறைவன் தமிழனையும், ஐரோப்பியனையும், ரஷ்யனையும் படைப்பதில் பாரபட்சம் காட்டவில்லையே? விளக்கை மொய்க்கும் விட்டில்கள்போல் குடிபோதைக்கு அடிமையாகவேண்டாம். சந்தோஷத்திற்காகக் குடிக்கிறோம் என்கிறீர்களே? 'பார்ட்டி, பார்ட்டி' எனக்கூறி குடித்து வெறித்து நிற்கிறீர்களே குடிக்கப்பாலின்றி "அம்மா, அம்மா" என அழுகின்ற குழந்தைகள்கூட நீங்கள் வாழும் சமூகத்தில் உங்களுடனேயே நடைப்பிணமாக வாழுகின்றார்கள் என்பதை உணரமுடியாத ஜடங்களா நீங்கள்?

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியவில்லை எனக் குடிப்பவர்களே! உங்கள் ஆறாவது அறிவை நீங்கள் யாரிடம் அடகு வைத்தீர்கள்? பெரியவர்களே சிந்தியுங்கள். எங்களுக்கு பொருளாதார வளம்மிக்க சமூகம் வேண்டும். பஞ்சம் பட்டினியில்லாத சமூகம்வேண்டும், கொலை, கொள்ளை, கோஷ்டி மோதல் இல்லாத சமூகம் வேண்டும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

நாளை என்பது எங்களுடைய கரங்களிலேயே தங்கியுள்ளது. நாங்கள் ஒன்று திரள்வோம். எங்களுடைய சமூகத்தில் குடிபோதையை ஒழிப்போம். எமது சிவந்த மண்ணிலே கிளை பரப்பி நிற்கின்ற குடிபோதையென்னும் நச்சு விருட்சத்தின் நிழலிலே வாழ்கின்ற எமது பெரியவர்களை நிழல் உலகிலிருந்து நிஜ உலகிற்குக் கொண்டுவருவோம். மினமினிப்பூச்சிகளை நட்சத்திரங்கள் என நம்பி ஏமாறப்போவதில்லை. நாம் அனைவரும் உடல், உள, சமூக நலனுக்காய் குடிபோதையை ஒழித்து அறிவாற்றலில் வல்லவர்களாகக்கூடி வாழ்வோம். அதற்காக இன்றே உறுதி கொள்வோம். ★

**ஆ.கனிமொழி**
**வேம்படி மகளிர் கல்லூரி.**

# இறக்குமதியாகும் குடைகளை விட கந்துரட்ட உற்பத்திகளுக்கு மதிப்பு!

## 10 ஊழியர்களுடன் ஆரம்பித்து கண்டியில் பரந்து விரிந்த நிறுவனம்

*கேள்வி:-* பல தடைகளுக்கு மதத்தியில் தங்களது வியாபாரத்தைக் கட்டியெழுப்பியுள்ளீர்கள்; நீங்கள் கடந்துவந்த இந்தப் பயணத்தைப் பற்றிக் கூறுவீர்களா?

*பதில்:-* நாங்கள் கந்துரட்ட குடை நிறுவனத்தை 1978இல் ஆரம்பித்தோம். அப்போது எமது மூத்த சகோதரர், அவர் தற்போது உயிருடன் இல்லை. மிகுந்த கஷ்டங்களுக்கு முகம் கொடுத்தார். 10 ஊழியர்களுடனும் நான்கு இயந்திரங்களுடனும் தொழிலை ஆரம்பித்தார். அந்த நாள்களில் எம்மிடம் சொந்தமான வாகனம் இருக்கவில்லை. எனவே, இரவில் உற்பத்திசெய்து பகலில் லொறிகளில் ஏற்றிக்கொண்டு எமது மூத்த சகோதரர் கொழும்புக்குக் கொண்டு செல்வார். இந்த வியாபாரத்தை ஆரம பித்து சுமார் 4வருடங்கள் வியாபாரம் சுமாராக நடைபெற்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்த நேரத்தில் எமது மூத்த சகோதரர் இறந்து விட்டார். அதன் பின்பு சகோதரர்களான நாம் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்திவந்தோம். 1990ஆம் ஆண்டளவில் வியாபாரம் ஓரளவு முன்னேற்றத்தைக் கண்டது.

அதன் பின்பே தொழிற்சாலையை மேலும் அபிவிருத்தி செய்ய முடிவு செய்தோம். அதற்காக கண்டி செலான் வங்கிக் கிளையில் 50 லட்சம் ரூபா கடனாகப் பெற்றுக்கொண்டோம்.

கண்டி செலான் வங்கி முதலாவது வாடிக்கையாளர் என்ற வகையில் எமக்கு அதிக உதவிகளை வழங்கியது. இவ்வாறு எமது வியாபாரம் ஒருவாறு நல்ல நிலைக்கு வந்துள்ளது.

*கேள்வி:-* நீங்கள் செலான் வங்கியின் கண்டிக் கிளையில் முதலாவது வாடிக்கையாளர் என்பதைக் கேட்க சந்தோஷமாக உள்ளது. உங்களுடைய மூத்த சகோதரர் இறந்த பிறகு நீங்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பீர்கள். அதைப்பற்றி கூறுவீர்களா?

*பதில்:-* அந்தக் காலத்தில் குடை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சுமார் 15வரை இருந்தன. அவர்களின் போட்டியை சமாளிக்க நாம் என்ன செய்யலாம் என்று சிந்தித்தோம். அதன்படி செயற்பட ஆரமபித்தோம்.

ஏனைய நிறுவனங்கள் உற்பத்தி செய்யாத வடிவமைப்புக்களில் நாம் குடைகளை உற்பத்தி செய்தோம். இதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று அனுபவம் பெற்றோம். அதன்மூலம் எமக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைத்தது.

நாங்கள் ஒரேயடியாக முன்னணிக்கு வந்து விடவில்லை. படிப்படியாக முன்னேறியவர்கள். தொழிலாளர்களும் அவ்வாறுதான். எம்மிடம் தொழில் செய்பவர்களின் நலன்பற்றி அதிக கவனம் செலுத்துகிறோம். எனவே, ஊழியர்களும் எம்மை விட்டுச் செல்வதில்லை. எமது ஆரம்ப கால ஊழியர்கள் இன்றும் எம்முடனேயே இருக்கிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுடன் நாம் போட்டி போடவேண்டியுள்ளது. அவை மலிவு விலையில் விறகப்படுகின்றன. எமது உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளதால் எம்மால் குறைந்த விலையில் விற்கமுடியாது. அரசு எமக்கு வசதிகள் செய்து கொடுத்தால் நாமும் போட்டி போடமுடியும்.

*கேள்வி:-* நீங்கள் எத்தனை குடைகள்வரை உற்பத்தி செய்கிறீர்கள்.

*பதில்:-* 28 வகையான குடைகளை உற்பத்தி செய்கின்றோம். 1,150 ஊழியர்கள் இருக்கின்றார்கள். அல்லாவின் துணையுடன் 17 வாகனங்கள் எம்மிடம் இருக்கின்றன.

*கேள்வி:-* ஏனைய உற்பத்திகளை விட - தொழிலதிபர்களை விட - நீங்கள் வேறுபட்டு காணப்படுகிறீர்கள். உங்கள் நிர்வாகத்தின் இரகசியத்தை எம்மிடம் பகிர்ந்து கொள்வீர்களா?

*பதில்:-* புதிதாக எதுவுமில்லை. எமது உற்பத்திப்பொருள் தரமானது. அதனால்தான் இன்று எமக்கென்று ஓரிடம் இருக்கிறது. சற்று கூடிய விலை கொடுத்தேனும் தரமான பொருள்களைக் கொள்வனவு செய்ய எமது வாடிக்கையாளர்கள் முன்வருகின்றனர்.

*கேள்வி:-* வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறீர்களா?

*பதில்:-* அது சற்று கடினமான விடயம்.

*கேள்வி:-* ஏன்?

*பதில்:-* எமக்கு எந்தவித நிவாரணமும் கிடைப்பதில்லை. உற்பத்திச் செலவு உயர்வாக உள்ளது. இதனால் வெளிநாட்டு சந்தையுடன் போட்டியிட முடியாதுள்ளது.

*கேள்வி:-* இதுவா உங்களது பிரச்சினை?

*பதில்:-* ஆம், இதுதான் பிரச்சினை. இதற்கு முன்னர் இரண்டு முறை ஏற்றுமதியில் ஈடுபட்டோம். அவை வெற்றியடையவில்லை. ஆனால் வேறு சிலர் உள்ளனர். அவர்கள் குடைகளை எம்மிடமிருந்து கொள்வனவு செய்து அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். நாமாகவே ஏற்றுமதி செய்தால் நஷ்டம் ஏற்படும். அதனால்தான் மற்றவர்கள் எம்மிடமிருந்து ஏற்றுமதி செய்கின்றனர்.

*கேள்வி:-* அப்படியாயின் அவர்களுக்கு எப்படி லாபம் ஏற்படுகிறது?

*பதில்:-* இது அவர்களுக்கு ஒரே வியாபாரம் அல்ல. வேறு பல பொருள்களுடன் குடைகளையும் ஏற்றுமதி செய்கின்றனர். எனவே, அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதில்லை.

*கேள்வி:-* உங்களது தொழிலை மேலும் விருத்தி செய்வதற்கு அரசிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்.

*பதில்:-* இதுவரை நாம் அரசிடம் எதையும் எதிர்பார்த்ததும் இல்லை. அவர்கள் எதையும் எமக்குத் தந்ததும் இல்லை.

*கேள்வி:-* அரசைக் குறைகூறாமல் உங்களுக்கு என்ன வேண்டும் என்று கூறுங்கள்?

*பதில்:-* நாம் அரசைக் குறை கூறவில்லை. பல நாடுகளில் ஏற்றுமதியாளர்களுக்கு வரிச்சலுகை உண்டு. அவர்களது செலவில் ஒரு பங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது. இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டால் அது வரவேற்கத்தக்கது.

*கேள்வி:-* சனா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து குடைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா?

*பதில்:-* ஆம். அவை தரமானவையாக இருப்பதில்லை. ஆனால், எமது பொருள்கள் அப்படியல்ல. எமது பொருள்களின் தரத்தைப் பற்றி கவனத்திற் கொண்டுள்ளோம். அதனால் மக்களும் எமது பொருள்களை விரும்புகின்றனர். தரமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறதோ எமக்குத் தெரியாது.

*கேள்வி:-* இந்தப் பொருள்களால் உங்களுக்கு ஏதும் தாக்கம் ஏற்படுகிறதா?

*பதில்:-* ஆம். எமது உற்பத்திச் செலவை விட 3 சதவீதம் குறைவான விலையில் அவர்கள் விற்பனை செய்கின்றனர். அதை எப்படிச் செய்கின்றனர் என்பது தெரியவில்லை.

*கேள்வி:-* மக்கள் எதனைத் தெரிவு செய்கின்றனர்? விலையைக் கருத்திற் கொள்கின்றனரா? அல்லது தரத்தை மனதிற் கொள்கின்றனரா?

*பதில்:-* ஒரு சிலருக்கு அது தெரியாமல் இருக்கலாம். ஆனால், அதிகமானவர்கள் தரத்தையே கருத்திற் கொள்கின்றனர். மக்களுக்கு எமது பொருள்கள்மீது நம்பிக்கை உண்டு.

*கேள்வி:-* உங்களது எதிர்காலத் திட்டங்கள் எவை?

*பதில்:-* நாம் உற்பத்தியாளர்கள் என்ற வகையில், உற்பத்திச் செலவைக் குறைக்கவே பார்க்கின்றோம். இன்னும் இரு வருடங்களுக்குள் இலங்கையில் கொள்வனவு செய்யப்படும் குடைகளில் 95 சதவீதத்தை உற்பத்தி செய்து தருவதே எமது நோக்கம்.

*கேள்வி:-* ஊழியர்களின் ஒத்துழைப்பு எவ்வாறு இருக்கிறது?

*பதில்:-* அவர்களை நாம் நன்றாக நடத்துவதால் ஊழியர்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அவர்களின் தேவைகளை அறிந்து நாம் உதவி செய்கின்றோம். ஊழியர்களுடன் நட்புறவைப் பேணிவருகின்றோம். ☆




ரீ.என்.எல். தொலைக்காட்சி நேருக்குநேர் நிகழ்ச்சியில் கந்துரட்ட குடை நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் எம்.எச்.எம்.டீன், நிறுவன அதிபர் எம்.எச்.எம்.சித்தீக், நிர்வாக இயக்குநர் எம்.கே.பக்ஸ் ஆகியோரை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், தொழில் அதிபரும் சிலிங்கோ குரூப் கம்பனிகளின் தலைவருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.

### வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர்

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 2ஆம் திகதி தோன்றிக் குடை உற்பத்தியில் தாம் கண்ட வெற்றிபற்றி விளக்கினார்கள் "கந்துரட்ட குடை நிறுவனத்தின் நிறுவன அதிபர் எம்.எச். எம.சித்திக், நிர்வாக முகாமையாளர் எம்.எச். எம்.டீன், நிர்வாக இயக்குனர் எம்.கே. பக்ஸ் ஆகியோர்.

இலங்கையின் குடை உற்பத்தியில் முதன்மையில் இருப்பது கந்துரட்ட நிறுவனம். இதன் தொழிறசாலை கண்டி - கொழும்பு பாதையின் கடுகண்ணாவைப் பகுதியில் அமைந்துள்ளது.

இது 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி 10 தொழிலாளர்கள், 4இயந்திரங்களுடன் ஆரம்பிககப்பட்டது. இதனை முகமது தாஜுதீன் ஆரமபித்தார். அவர் மரணம் அடைந்த பின்னர் அவரது சகோதரர்கள் வியாபாரத்தைப் பொறுப் பேற்றனர்.

இன்று 1000இற்கும் மேலான தொழிலாளர்களுடன் இந்நிறுவனம் இயங்குகிறது. தொழிலாளர்களின் நலனையும், பொருள்களின் தரத்தையும் பாதுகாத்து வரு வதே தமது வெற்றியின் இரகசியம் என்று கந்துரட்ட குடை நிறுவனத்தின் உரிமையாளர்கள் கூறுகின்றனர். எம்.எச். எம்.சித்திக் மற்றும் எம்.எச்.எம். டீன் ஆகிய சகோதராகளுடன் நிறுவனத் தின் நிறைவேற்று அதிகாரி எம்.கே.பக்ஸும் தமது தொழில் அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளித்தார்.

தொலைக்காட்சியில் இந்த மூவரையும் அறிவிப்பாளர் சமுதிக சமர விக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

# ஐரோப்பிய தரம்வாய்ந்த 'பிளாஷ்' மின்குமிழ்கள்

சியெனர்ஜி எலெக்றோனிக் நிறுவனம், 'பிளாஷ்' ரக மின் சிக்கன மின்குமிழ்களை யாழ்.குடாநாட்டிற்கு அறிமுகம் செய்துள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையின் அனுமதி பெற்ற - கொன்சொலிடேற்றட் அமைப்புடன் இணைந்து செயற்படுகின்ற - இந்நிறுவனத்தின் உற்பத்திகள் ஐரோப்பியத் தரம் வாய்ந்தவையாகும். இந்நிறுவனத்தின் உற்பத்திகளுக்கு, மொறட்டுவ பல்கலைக்கழகம் தரச்சான்றிதழ் வழங்கியுள்ளது. அத்துடன் இலகு கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ் விநியோகஸ்தர்களாகப் பதிவு செய்வதற்கான அனுமதி, இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலான இந்நிறுவனத்தின் உற்பத்திகளுக்கு, உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் உத்தரவாதம்




அளிக்கிறது. மேலும் இத்துறையில் பரந்துபட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் திறன், இலங்கையில் இந்நிறுவனத்திடமே உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ☆

# ஆரோக்கிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும் ரிஷி

இலேசான காய்ச்சல் என்று வைத்தியரிடம் போகின்றோம். அவர் உங்களிற்கு நீண்டகாலத்திற்கு முன்னர் இறந்துபோன தாத்தாவின் ஆவி தொற்றிவிட்டது, அதனால்தான் காய்ச்சல் என்று கூறினால் எப்படி இருக்கும்?

வெகுகாலத்திற்கு முன் ஒரு மனிதன் நோய்வாய்ப்பட்டால் இப்படித்தான் கூறுவார்கள். சின்ன வித்தியாசம் அவர்கள் மருத்துவர்கள் இல்லை; மந்திரவாதிகள். எல்லாவற்றையும்விட பெரிய ஆச்சரியம் அப்போது மேலைத்தேய நாடுகளில் மருந்து சிகிச்சை முறைகள், ஏன் மருத்துவர்கள் யாருமே இருக்கவில்லை. நீங்கள் நம்பினால் நம்புங்கள். அப்போது நோய்கள் ஏன் ஏற்படுகின்றது என்றுகூட மேலைத்தேசத்தவர்கள் அறிந்திருக்கவில்லை. அப்போது பிணிகள் ஏதும் ஏற்பட்டால் மந்திரவாதிகளும் பேயோட்டிகளும் இரவிரவாக தாரை தம்பட்டைகளை அடித்துக்கொண்டு ஓலமிட்டபடி நோய்வாய்ப்பட்டவரை சாட்டையால் அடித்து குணப்படுத்த முயன்றனர். இதற்குக் காரணம் அந்த நோயாளி தெய்வ நிந்தனைக்கு ஆளாகிவிட்டதாக - கருதியமைதான் ஈற்றில் அந்த நோயாளி சாட்டையடிக்குப் பயந்து சுகதேகியாகிவிடுவார் - இல்லையெனில் நோய் முற்றி ஆள் 'அம்பேல்'!

கீழைத்தேய நாகரிகங்களிலோ நிலை முற்றிலும் வேறு, கீழைத்தேய மக்கள் நோய்கள் தொடர்பாக, பூரண விளக்கத்தைக் கொண்டிருந்ததோடு அதற்கான இயற்கை வைத்தியத்தையும் நன்கறிந்திருந்தனர். குறிப்பாக இந்திய, சீன வைத்திய முறைகள் அன்று வளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் இருந்தன. சீனாவில் அப்போது ரிஷி எனப்படும் காளான் வெகு பிரசித்தம். மூலிகைகளின் பட்டியலில் முதலிடத்தில் இருந்ததால் ராஜ மூலிகை, இறை மூலிகை எனப் பல மகுடங்கள் சூட்டப்பட்ட அந்த அற்புத சக்திவாய்ந்த ரிஷி முற்காலத்தில் வைரத்தைவிட மதிப்புள்ள ஒன்றாகக் கருதப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பனை அபிவிருத்திச் சபை

## திக்கம் வடிசாலை

### கூறு விலைகளை திறந்து பரிசீலித்தல்

திக்கம் வடிசாலையிலுள்ள பாவிக்கப்படாத நிலையிலுள்ள பாரிய பழைய கொதிகலனை அதன் இருப்பில் இருந்து முற்றாகக் கட்டடத்தற்கு வெளியே அகற்றும் வேலைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கூறு விலைகள் நாளை (04.10.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்பட இருப்பதால் கூறுவிலைகளைச் சமர்ப்பித்தவர்கள் திக்கம் வடிசாலை காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
*பனை அபிவிருத்திச் சபை.* (C/24052) திக்கம் வடிசாலை,
*பனை அபிவிருத்திச் சபை.*


# மரண அறிவித்தல்கள்

## வைரவி வேலுப்பிள்ளை

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவி வேலுப்பிள்ளை அவர்கள் 29.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2002) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சித்தன்கேணியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.குணரத்தினம் (குணம்)
*சித்தன்கேணி.* (8998)

## திருமதி சித்திராதேவி பவளநாதன்

***(கணக்காய்வாளர் திணைக்கள பரிசோதகர் - யாழ்ப்பாணம்)***

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம், கோவில் வீதி 141ஆம் இலக்க இல்லத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சித்திராதேவி பவளநாதன் நேற்று (02.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பவளநாதன் (ஓய்வுபெற்ற அரச எழுதுவினைஞர், கணக்காய்வுத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் நிருசாந்தி, உமாசாந்தி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), பிரியந்தன் (பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற திருமதி பராசக்தி வேலுப்பிள்ளை மற்றும் திருமதி பூரணம் நாகராசா, பரமநாதன், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் திருமதி பரிமளம், கனகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.141, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (8996)
தகவல்:
பவளநாதன் (கணவர்)

# ஆரோக்கிய உலக.....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷி காளானை வைத்திருக்கும் ஒருவருக்கு நிறைய தங்கமும் வைரமும் அள்ளிக் கொட்டினால் என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய் என்று தர மறுத்து விடுவார்கள். ரிஷியும் வேறு பெறுமதியான பொருள்களும் உள்ள இடத்தில் திருடப்போகும் ஒரு திருடனுக்கு ரிஷி இருக்கும் சமாச்சாரம் தெரிந்தால் வைரமும் வைடூரியமும் இரண்டாம் பட்சமாகிவிடும். இந்தளவு அருமை பெருமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த ரிஷி காளான் கிடைப்பது என்பது மிக அரிது. புராதன சீனவாசிகள், 'கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிரித்துக்கொண்டு கொடுக்குமாம்' என்ற பழமொழியை நம்பினார்களோ என்னவோ கொடுக்கும் தெய்வம் நான்கைந்து ரிஷியைக் கொடுக்குமாம் என்பதை நம்பினார்கள். ரிஷி கிடைப்பது வெகு அருமை. இதற்கான காரணம் ரிஷி காளான்கள் சாதாரணமாக வளர்வதில்லை. இயற்கையாக மரங்கள் அடர்ந்த மலை உச்சிகளில் உயர் ஈரப்பதனும் மங்கிய சூரிய ஒளியும் நிலவவேண்டியது மிக முக்கியம். உக்கிய மரக்கிளைகளின் இடுக்குகளில் குறிப்பாக சில வகையான மரங்களிலேயே இவை வளர்ந்தன. இதுவும் மிக வயது வந்த (10 ஆயிரம்) மரங்களில் இரண்டு அல்லது மூன்று மரங்களில் மட்டுமே ரிஷி காளான் வளர்ந்தது. இப்போது புதையல் தோண்டப்போகும் கூட்டம் போல அப்போது ரிஷி என்னும் விலைமதிக்கமுடியாத பொக்கிஷத்தைத் தேடி தமது உயிரையும், இரண்டாம் பட்சமாக்கிக்கொண்டு சீனாவின் செங்குத்தான மலைத்தொடர்களில் ஏறினார்கள் அநேகர்; பலர் திரும்பவில்லை. சிலர் திரும்பினார்கள் வெறுங்கையோடு. இவற்றையெல்லாம் மீறி ரிஷியென்னும் பொக்கிஷத்தோடு வீடு திரும்பியவர் அதை விவரிப்பது கடினம்.

ஒரு சிலர் தமக்கு ரிஷி கிடைத்ததையே வெளியிடமாட்டார்கள். ஏனெனில் யாரும் 'அபேஸ்' பண்ணி விடுவார்கள் என்ற பயம் வேறு. சிலர் ரிஷி காளான் கிடைத்ததையே பெரிய வைபவமாகக் கொண்டாடினார்கள்.

*(வளரும்)*


# R.B.Booking Centre

## ஆர்.பி(B). பஸ் ஆசனப் பதிவகம்

(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்)

**நவீன சந்தை,
வைரவர் கோயிலுக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.**

**15, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.**

## விசேட கட்டணக் குறைப்பு

பயணிகளே!

இன்று (03.10.2002) வியாழக்கிழமை முதல் எமது ஸ்தாபனத்தினூடாகச் செல்லும் சகல யாழ்.~கொழும்பு, யாழ்.~திருமலை ~ வான்களின் பயணக் கட்டணம் ரூபா 800/= ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

☞ வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் சகலவித பழவகைகளையும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.நகரிலிருந்து V.R.D. ரவல்ஸ் மூலமாக உங்கள் பொதிகளைக் கொண்டு செல்வதற்கு:

**ஆர்.பி.ஆசனப் பதிவகம்**
15, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 077-7373687,
077-7156917

**வேளாங்கண்ணி ஸ்ரோர்ஸ்**
16, பெரியகடை வீதி
(மரக்கறிச் சந்தைக்கு அருகில்),
யாழ்ப்பாணம். (C/24051)



SDS Computer Services Quality Computer Components

## P4 COMPUTER

- INTEL PENTIUM 1.7 Ghz
- PCS MAIN BOARD
- 128 MB SD RAM
- 40 GB ATA HARD DISK
- 32 MB VGA CARD,SOUN CARD
- 52X CD ROM DRIVE
- 1.44MB FLOPPY DISK DRIVE
- P4 ATX TOWER CASING
- 800W SPEAKER
- 56K MODEM
- 10/100 Mbps Network Card
- 15" PCS Digital Color Monitor

Rs.78,000
3 Years Warranty

SDS Computer Services Quality Computer Components

## PENTIUM 4

- INTEL PENTIUM 4 1.7 Ghz
- MERCURY MAIN BOARD
- 128 MB SDRAM
- 40 GB ATA HARD DISK
- 32 MB RIVA TNT2 VGA CARD
- 32 BIT SOUND CARD
- 52X CD ROM DRIVE
- 1.44MB FLOPPY DISK DRIVE
- P4 ATX CASING WITH 350W
- 800W SPEAKER
- 15" COLOR MONITOR

Rs.59,000

## PENTIUM 3

- INTEL PENTIUM III 1.2 Ghz
- GIGABYTE MAIN BOARD
- 128 MB SD RAM
- 40 GB ATA HARD DISK
- 16 MB RIVA TNT2 VGA CARD
- 32 BIT SOUND CARD
- 52X CD ROM DRIVE
- 1.44MB FLOPPY DISK DRIVE
- ATX CASING
- 800W SPEAKER
- 56Kbps MODEM
- 15" COLOR MONITOR

Rs. 53,000

## AMD 1000

- AMD 1000 Mhz
- OPEN MAIN BOARD
- 128 MB SD RAM
- 20 GB ATA HARD DISK
- 8 MB RIVA TNT2 VGA CARD
- 32 BIT SOUND CARD
- 1.44MB FLOPPY DISK DRIVE
- ATX CASING
- 800W SPEAKER
- 15" AOC COLOR MONITOR

Rs.42,000

**Free** SCREEN FILTER , HEAD PHONE WITH MIC, INTER NET & E-MAIL CONNECTION

SDS Computer Services Quality Computer Components

**விற்பனைக்கான எமது மேலதிக பொருட்கள்**

- Computers - P4/ PIII / Laptop Computers
- Branded servers
- Computer Accessories
- UPS
- Stabilizer
- Network Accessorius and tools
- Scanners -HP / Genius / Acer / Mercury
- Printers -HP / Epson / Canon / Dotmatrix
- Joysticks & Steering Wheels
- Computer table & Chair
- All Types of Ribbons
- All Types of Cartridges
- All Types of Toners
- Floppy Diskettes & CD's
- Screen Filters, Dust Cover & File Holder
- Computer Cleaning Kits
- Photo Quality Papers
- Cable Connectors
- Backup Storage Solutions
- Digital PC Cameras
- Mp3 - CD - VCD - Player
- CD Copy Duplicators
- Ect.,

☞ இச்சலுகை 31/10/2002 வரை

SDS Computer Services
Hotline : 077- 726290
Tel : 021222 5251
இல. 178 (114), அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
எங்களின் நோக்கம் - உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்.

# பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்ட பிறகு கடற்படையினர் நெடுந்தீவில் இயங்குவர்!

## செய்தியாளர்கள் சந்திப்பில் வடபிராந்திய தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்.3

**நெடுந்தீவில் விரைவில் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் அங்கு பொலீஸாருடன் இணைந்து கடற்படையினர் பணிபுரிவார்கள்.**

**வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் ஆர்.பி.வீரசேகர இவ்வாறு தெரிவித்தார்.**

**காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் நேற்று முற்பகல் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பின பொறுப்பில் பல பிரதேசங்கள் இருந்தன. புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் அவர்களின் ஆயுதங்கள் மீளப் பெறப்பட்டன. அதனால் அவர்கள் பொறுப்பில் இருந்த பிரதேசங்களைப் பொறுப்பேற்று அங்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது கடற்படையினரின் கடமையும் கூட.

இந்த அடிப்படையில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தை முதலில் பொறுப்பேற்றோம். அதன் பின்னர் நெடுந்தீவைப் பொறுப்பேற்கவே அங்கு முகாம அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**நெடுந்தீவு செல்வோம்**

இதற்கு எதிர்ப்புக் கிளப்பப்பட்டதை அடுத்து அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது அங்கு பொலீஸார் தமது நிலையத்தை அமைத்துப் பொறுப்பேற்ற பின்னர் அவர்களுடன் சேர்ந்து கடற்படையினரும் பணியாற்றுவர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட சூழ்நிலையைக் குழப்பும் செயல் இது என்று கூறமுடியாது. புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்தே நாம் பணிபுரிகின்றோம். சமாதான சூழ்நிலை உருவாவதற்கு கடற்படையினர் தமது முழுப்பங்கையும் வழங்கி வருகின்றனர். எந்தக் கட்டத்திலும் சமாதானத்துக்கு எதிராகக் கடற்படையினர் செயற்படவில்லை; செயற்படப் போவதும் இல்லை.

கடற்படையினரை ஆத்திரமூட்டும் வகையில் அண்மைக்காலங்களில் பலவித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய சம்பவங்கள் தொடரக் கூடாது. அவ்வாறு தொடர்ந்தால் எமது படையினரை கட்டுப்படுத்தமுடியாத நிலையே ஏற்படும்.

திலீபன் நினைவாக தீவகக் கடற்பகுதியில் புலிக்கொடியை ஏற்றியபடி படகுகள் வலம் வந்தன. அக்கடற்பகுதியில் செல்லும் படகுகள் யாவும் எமது கண்காணிப்பிலேயே செல்கின்றன. எமது அனுமதியின்றி கடற்பகுதிகளில் படகுகள் சென்றால் அதை மறித்து சோதனை செய்யவேண்டியது எமது கடமை. அந்த வகையிலேயே படகுகளை மறித்து சோதனை செய்தோம். எம்மிடம் முன் அனுமதி பெற்றிருந்தால் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கியிருப்போம்.



வேலணை பாடசாலைக்கு முன்பாகவுள்ள பாதை ஊடான போக்குவரத்துக்கு அனுமதிக்காமை, காரைநகரில் பொதுமக்கள் தாக்கப்பட்டதாக கூறப்பட்டமை, நாரந்தனையில் கள்ளுத்தவறணையில் பொதுமக்கள் தாக்கப்பட்டமை ஆகியன தொடர்பாக போராட்டங்கள் நடத்த முஸ்தீபுகள் இடம்பெற்றன. இவ்வாறு போராட்டங்கள் இடம்பெறுவது எமக்கு கவலை அளிக்கிறது.

பொதுமக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக எமக்குத் தெரியப்படுத்தலாம். அது குறித்து நாம் உடன விசாரணை செய்து நடவடிக்கை எடுப்போம்.

நாரந்தனை தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தினோம். அந்த சம்பவத்தின்போது ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கினோம். அத்துடன் இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இரு கடற்படையினர் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நாகர் கோவிலிலிருந்து பூநகரி வரை மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தப் பகுதி மக்களின் நலனில அக்கறை கொண்டு அவர்களை அப்பகுதியில் மீன்பிடிக்க அனுமதித்திருந்தோம். புரிந்துணர்வு உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்டபடி முகாம்களிலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் உள்ள பிரதேங்களில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் எவ்வளவு தூரமும் சென்று மீன்பிடிக் கலாம்.

மீன்பிடிப்பதற்காகப் புறப்படும் இடத்துக்கு மீனவர்கள் திரும்ப வசதியாகவே 'பாஸ்' நடைமுறையை கொண்டு வந்தோம். வெளியார் ஒருவர் நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

**பாஸ் நடைமுறை**

பாஸ் நடைமுறையை நீக்க வேண்டும் என்று மீனவர் சங்கங்கள் கோருகின்றன. மீனவரின் நன்மை கருதி நடைமுறையில் உள்ள இந்த பாஸ் முறை நீக்கப்படமாட்டது.

மண்டைதீவில் மீன்பிடிக்க அனுமதி வழங்கியுள்ளோம். ஆனால், மீனவர்கள் அங்கு தவறுகளைச் செய்கின்றனர். இதன் காரணமாக கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. கடற்கரையோரத்தில் நடப்பட்டுள்ள பாதுகாப்பு கம்பங்களில் மீனவர்கள் தமது வள்ளங்களைக் கட்டுகின்றனர். இவ்வாறு செய்ய வேண்டாம் என அவர்களுக்கு நாம் அறிவுறுத்தல் விடுத்தோம். ஆனால், நாம் தாக்கியதாக எம்மீது பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தீவகத்தில் வாழும் மக்களுடன் கடற்படையினர் நல்லுறவுடன் செயற்படுகின்றனர். எக்கட்டத்திலும் அவர்களுக்கு கடற்படையினர் அச்சுறுத்தல் எதையும் விடுக்கவில்லை. மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குகின்றனர். ஆனால், தேவையற்ற வகையில் எம்மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் எம்மீது குற்றசசாட்டுக்களை சுமத்துவதை விட்டு அவர்கள் எம்முடன் ஒத்துழைத்து செயற்பட வேண்டும். அதன் மூலம சமாதானத்தை விரைவில் காணமுடியும் - என்றார் அவர். (ம-3-8)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 159 பேரே தீவகத்தில் உள்ளனர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த 159 உறுப்பினர்கள் மட்டுமே தற்சமயம் தீவகத்தில் உள்ளனர். அவர்களுக்கான மாதாந்த நிவாரணம் தொடர்ந்து எம்மால் வழங்கப்பட்டு வருகின்றது.

வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஆர்.பி.வீரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

தீவகத்தில் நீண்டகாலமாக ஆயிரத்துக்கு மேற்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருந்தனர்.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் ஈ.பி.டி.பியின் ஆயுதங்கள் மீளப் பெறப்பட்டன. இதன்பின் பெரும் எண்ணிக்கையான ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கொழும்புக்குச் சென்று விட்டனர். தற்சமயம் 159 பேர் மட்டுமே தீவகத்தில் உள்ளனர்.

ஊர்காவற்றுறையில் 145 பேரும் நெடுந்தீவில் 8 பேரும் காரைநகரில் 4 பேரும் அனலைதீவில் 2 பேரும் மட்டுமே உள்ளனர். அவர்களுக்கான மாதாந்த நிவாரணத்தை நாம் தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம்.

அவர்கள் உதவிகள் ஏதும் கேட்டால் செய்துகொடுப்போம். அதுதவிர பெரிய அளவில் அவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவதில்லை - என்றார் அவர். (ம-3-8)

## தொடர்புசாதன வளப்பயிற்சி நிலையம்: டென்மார்க் தூதுவர் ஆரம்பித்து வைப்பார்

### 16 ஆம் திகதி சிற்றி ஹோலில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ். மாவட்டத்துக்கான தொடர்பு சாதன வளப் பயிற்சி நிலையத்தை இந்தியா மற்றும் இலங்கைக்கான டென்மார்க் தூதர் ஸ்ரேன்பேர்க் எதிர் வரும் 16 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

இந்த வைபவம் 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். சிற்றி ஹோல் மண்டபத்தில் இடம் பெறவுளளது. அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களும் இந்த நிலையத்தின் திட்டம் குறித்து தூதருடன் கலந்துரையாடவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகமும் 'யுனெஸ்கோ' நிறுவனமும் இணைந்து மேற்படி பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்கவு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## 'சீடா' நிறுவன உயர்மட்ட குழு யாழ்ப்பாணம் வந்து திரும்பியது

### செயற்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.3

'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் கெயர் நிறுவனத்தினால் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப பார்வையிடுவதற்காக 'சீடா' நிறுவனப் பிரதிநிதிகள் குழு வொன்று கடந்த வாரம் இங்கு வந்து திரும்பியுள்ளது.

6 பேர் கொண்ட இந்தக் குழுவில் 'சீடா' தலைமைக்காரியாலய செயல் முறைப் பகுப்பாய்வாளர் திருமதி எல். அன்னமேரி, 'சீடா' திட்டப் பணிப்பாளர் ஜோசப் செப்வற்கு, ஜிஸ்ப் வெளிக்களப் பணிப்பாளர் ஜோபொல்கர், திட்ட உத்தியோகத்தர் திருமதி றிஸ்வினா டீ அல்விஸ், வெளிக்களப் பணிப்பாளர் ஹசன் மொபின், 'சீடா' அபிவிருத்தி ஆலோசகர் திருமதி சியாமளா சிவகுருநாதன் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

கடந்தகால யுத்தங்களினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளான தென்மராட்சி, வடமராட்சி மற்றும் கரையோரப்பகுதிகளுக்கும் சென்று அங்கு தமது நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவித் திட்டங்களைப் பார்வையிட்ட அவர்கள் அங்கு செயற்படுத்த வேண்டிய ஏனைய வேலைத்திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

அத்துடன் வன்னிப்பகுதிக்குச் சென்று அங்கு 'சீடா' திட்டத்தின் கீழ செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத் திட்டங்களையும் பார்வை யிட்டனர். அடுத்த வருடம் வடபகுதியில் 'சிறுவர் உரிமைகள்' தொடர்பான திட்டம் ஒன்றினைச் செயற்படுத்து வதற்கும் தாம் திட்டமிட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். (ம-4)

## நீதிபதிகள் சட்டத்தரணிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.3

இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள வேலைவாய்ப்பு, தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் குழுவினரும் நாளை காலை 8 மணிக்கு யாழ்.நீதிமன்றில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

எனவே, நீதிபதிகள், சட்டத்தரணிகள் அனைவரையும் காலை 8 மணிக்கு யாழ்.நீதிமன்றத்துக்கு வருகை தருமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா கேட்டுள்ளார்.

முதலில் இந்தக் கலந்துரையாடல் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டும் காணாமல் இருக்கிறது கடற்படை

### புலிகளின் அரசியல் துறையினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.3

புரிந்துணர்வு உடன்படிக்கையினை அடிக்கடி மீறும் கடற்படையினர் எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து தொழில் செய்வதை மட்டும் கண்டும் காணாதது போன்று இருக்கின்றனர்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறை பிரமுகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் புலிகளின் அரசியல் பிரமுகர்கள் மற்றும் படை அதிகாரிகளுக்கிடையே இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, அரசியல்துறைப் பிரமுகர் பாப்பா ஆகியோரும் படைத்தரப்பில் வடபிராந்திய கட்டளைத்தளபதி சரத் பொன்சேகா, யாழ்.மாவட்ட கடற்படைத் தளபதி ஒபேசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய மீனவர்கள் குடாநாட்டு கடற்பரப்புக்குள் நுழைவதை தடுத்து குடாநாட்டு மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்குரிய நிலையை உருவாக்க கடற்படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாததான பின்னர் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மீளக் குடியமர்வதற்காக சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வருகைதந்த போதிலும் சில இடங்களில் அவர்களை மீளக் குடியமர இராணுவம் அனுமதிக்கவில்லை. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி மக்களுகான இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் சிலதடைகள் உள்ளன.

இதுவரை திறக்கப்படாமல் இருக்கின்ற வீதிகள் மக்களின் பாவனைக்காக திறந்துவிடப்படவேண்டும். இராணுவத்தினரால் பயிர்ச் செய்கைக்கு தடை செய்யப்பட்டுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

- என்று விடுதலைப் புலிகள் தரப்பில் மேலும் வலியுறுத்தப்பட்டது. இவற்றுக்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிப்பதாக படை அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-4)

## கூட்டம்

தென்மராட்சி,ஒக்.3

சாவகச்சேரி சத்தியம்மன் வித்தியாலய அபிவிருத்திச் சங்க விசேட பொதுக்கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி சி.தர்மகுலசிங்கம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்வார் என சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-117)

## புனரமைக்கப்பட்ட குள கையளிப்பு வைபவம் நாளை நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.3

பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட வட்டுக்கோட்டை - அராலி எல்லையில் உள்ள வளவில்குளம் நாளை வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக அப்பகுதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதன் புனரமைப்புக்கென 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு மக்கள் பங்களிப்புடன் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம-10)

## முகாமைத்துவ பீட விரிவுரைகள் 7ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு விரிவுரைகள் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட மாணவர்களுக்கான மீள் பதிவுகள் நேற்றுமுதல் இடம்பெற்று வருவதாகவும், முதலாம் வருட மாணவர்களுக்கு விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-5)

# கல்வி அபிவிருத்திச் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கல்வி அபிவிருத்திச் செயலமர்வு எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் விடுமுறை தினங்களில் பின்வரும் நிலையங்களில் நடைபெறுமெனவும் பாடசாலை குடும்ப அடிப்படையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தங்களுக்குரிய நிலையங்களில் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியால்யம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் ஆகிய நிலையங்களில் செயலமர்வு நடைபெறும். (ம-117)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 04 - 1949

மறைவு 24 - 09 - 2000

### திருமதி புஸ்பராணி சிவப்பிரகாசம்

திதி: அபரபட்ச துவாதசி
03.10.2002

ஆண்டுகள் இரண்டு ஆனதம்மா!
ஆறாத் துயரில் நாங்களம்மா!
உங்கள் மதிவதனம் மறக்கமுடியாத
செல்வம் அம்மா!

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து*
*உங்கள் நினைவோடு வாழும்*
கணவர், பிள்ளைகள், மருமகன்,
சகோதரர், மைத்துனர்.

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (8989)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 05 - 11 - 1960

மறைவு 04 - 09 - 2002

### அமரர் இராசா சிவபாதசுந்தரம்

*(யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப உத்தியோகத்தர்)*

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பார்ப்போருக்கு உத்தமனாய் வாழ்ந்த எம் தெய்வமே!
உன் மறைவுதனில் நியாயம் என்ன?
ஊரொடு பகைத்தாயில்லை உறவோடு சினந்தாயில்லை
பாரொடு தொடர்பறுத்து நீ பறந்தது ஏனய்யா?

04.09.2002 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இராசா சிவபாதசுந்தரம் அவர்கள் நோயுற்றிருந்தவேளை பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும், அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடிவந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், ஏனைய இதர வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இன்று (03.10.2002) வியாழக்கிழமை முற்பகலில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உசன், மிருசுவில்.* (8990) - மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பு புலேந்திரன்

உடுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த சின்னப்பு புலேந்திரன் அவர்கள் நேற்று (02.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தேவமோகன், தேவஅனுரா, தேவரொபின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தர்மராணி, தயாமதி, ஜெனித்தா ஆகியோரின் அருமை மாமனாரும் விஜிதா, ரஜிதா (கனகரத்தினம் ம.ம.வி. மாணவர்கள்), பவிந்தன், டினேஸ், டிலைக்ஷன் (யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அருமைப் பேரனாரும் நேசரத்தினம், நல்லம்மா, நவரத்தினம், கணேஸ், இலங்கைநாதன், பொன்மலர், காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2002) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் கிழக்கு,*
*இணுவில்.* (8987)

தகவல்: தேவமோகன்,
தேவஅனுரா

## பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் உயர் அதிகாரி சி.ஜே. பொதா (BOTHA) தலைமையிலான குழுவொன்று யாழ்.செயலகத்தின் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்து அங்குள்ள நடைமுறைகளைப் பார்வையிட்டுள்ளது.

அத்துடன் உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயருடன் கலந்துரையாடிய குழுவினர் தமது தூதரகத்துக்கு வழங்கப்படுகின்ற விவாக, பிறப்பு சான்றிதழ்கள் தொடர்பாகவும் பரிசீலனைகளை மேற்கொண்டதுடன் சில சான்றிதழ்களையும் பெற்றுச்சென்றுள்ளது. (ம-10)

## சமூக வலுவூட்டல் பொதுக்கூட்டம்

இணுவில்,ஒக்.3

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (நியாப்)கீழ் சேவா லங்கா மன்றம் ஊடாக நடத்தப்படும் சமூக வலுவூட்டல் சம்பந்தமான, மாதாந்த கிராமிய பொதுக்கூட்டம் நாளை சரவணை நாகேஸ்வரி பாடசாலை மண்டபத்தில் காலை 10.00.மணியளவில் நடைபெற உள்ளது. இதில் பல அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவிருக்கின்றார்கள். இப்படியான கூட்டங்கள் நியாப் திட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இடங்களில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

## கலந்துரையாடல்

வலி.மேற்கு,ஒக்.3

வலிகாமம் மேற்குப் பிரதேச விளையாட்டுக் கழகங்களிற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழீழத் தேசிய விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர் கலந்துகொள்ள இருப்பதனால் சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-175)

## விவரங்களைப் பதிவுசெய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.மாவட்டத்தில், தைக்கும் ஆடைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழில் முயற்சியாளர்களின் விவரங்களை, யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றம் சேகரித்து வருகிறது.

இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழில் முயற்சியாளர்களும், தங்களது பெயர் விவரங்களை, ஜமுனா வீதியிலுள்ள கைத்தொழில் மன்றக் காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-9)

## தவறிவிட்டது

சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி ஜெயதேவியின் தாலிக்கொடி கச்சாய் வீதிக்கும் சங்கத்தானை பாடசாலைக்கும் இடையில் 01.10.2002 செவ்வாயன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அவரது சகோதரரான இத்தியடிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த க.துரைராசாவிடம் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8984)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம் 2001 - 01 - 08

மறைவு 2002 - 09 - 03

### செல்வி சாளினி யோகநாதன்

அன்னை மடியில் பிறந்து
எங்கள் மடியில் தவழ்ந்து
இன்பம் பொங்கிட நாங்கள்
இறுமாந் திருந்த வேளை
எங்களை எல்லாம் விட்டு
இடையில் எங்கு நீ சென்றாய்
எங்கள் செல்வமே கனியே
கண்ணீரால் கலங்குகின்றோம் இங்கே!

*ஏழாலை தெற்கு,*
*ஏழாலை.* (8961) சி.பவளத்துரை குடும்பத்தினர்.

## சேவை நலன் பாராட்டு



தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு அயராது உழைத்து அண்மையில் இளைப்பாறிய

உயர்திரு.செம்மல்

### இலங்கையர் கணேசன்

அவர்கள் செயல்திறன்மிக்க அதிபராக யா/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று தென்மராட்சி கல்வி வலயத்தில் செயல் வீரனாக ஆற்றிய சேவைதனைப் போற்றி வாயார வாழ்த்தி மனமாரப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி.
(8991)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 135 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவன்



செல்வன்

### மகாதேவன் நவீனன்

அவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கவும் நீர்வேலி முருகனின் துணையுடன் நீடூழி வாழவும் வாழ்த்துவதுடன், கல்வியில் உறுதுணை அளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெரியமாமா, மாமி,
சின்னமாமி (கனடா),
கோபினா அக்கா,
தேவி மாமி, அத்தான்.

(8985) *ஏழாலை கிழக்கு, ஏழாலை.*

## பொதுக்கூட்டம்


சித்த மருத்துவ மாணவர்கள் அனைவருக்குமான பொதுக்கூட்டம் நாளை (04.10.2002) வெள்ளிக்கிழமை காலை 11.00 - 12.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைவரையும் துறை மண்டபத்தில் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*விடயம்:* நவராத்திரி தொடர்பானது.

தலைவர்,
சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம்.

(8982)


## செய்மதி அன்ரனா சிஸ்டம்!



எமது Sats-Tech-India நிறுவனத்தின் யாழ்.பிரிவான Sats-Tech Engineer's இன் 1ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கையில் எங்கும் கிடைக்காத விலையில் 8' மற்றும் 10' அனலொக்/டிஜிரல் செய்மதி அன்ரனா சிஸ்டம் விற்பனையில்.....!

8 அடி டிஜிரல் சிஸ்டம் Rs. 25,000/-

10 அடி டிஜிரல் சிஸ்டம் Rs. 30,000/-

8 அடி அனலொக் சிஸ்டம் Rs. 15,000/-

10 அடி டிஜிரல் தானியங்கி டிஷ் கொன்ரோல் மோட்டருடன் Rs. 45,000/-

☞ யாழ்./வன்னி மாவட்டங்கள் உட்பட இணைப்புக் கட்டணம் இலவசம்.

*மேலதிக விவரங்களுக்கு:*

**SATS-TECH ENGINEER'S**

M/s National Video Centre,
182, K.K.S. Road, Kokkuvil (Jaffna). Phone: 077 710785

(8979)

# முதலாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



மலர்வு 05 • 06 • 1949

உதிர்வு 14 • 09 • 2001

## அமரர் வைத்திலிங்கம் தெய்வேந்திரம்

(முன்னாள் கல்வித் திணைக்கள ஊழியர்)

விதியின் வழியினிலே நீங்கள்
விண்ணகம் சென்றாலும் - எம்
நெஞ்சின் நினைவுகளிலே
நீங்காது நிலைத்திடுவீர்

*5/1, முதலியார் வீதி,*
*நாவலர் றோட்,அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (9004) அன்பின் சகோதரர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 26 • 12 • 1955

உதிர்வு 04 • 09 • 2002

## அமரர் பூலோகம் செல்வராசா

சமுத்திரத்தில் மாலுமியை
தவற விட்ட கப்பலாய்
அந்தரிக்கின்றோம் நாமிங்கு
வந்தெம்மை கரைசேர்க்க மாட்டாயா?

எமது குடும்ப வழிகாட்டியின் 31ஆம் நாள் நினைவு தினம் நாளை (04.10.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்பாக அழைக்கின்றோம்.

*பழைய தபால் கந்தோரடி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (9006) - குடும்பத்தினர்

# விவசாய ஆய்வு கருத்தரங்கு

சண்டிலிப்பாய்,ஒக்,3

கெயர் நிறுவனம் பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தும் விவசாய ஆய்வுக கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மு.ப. 11மணிக்கு நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் அலுவலகத்தில் சம்மேளன தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் கெயர் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பதிகாரி உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வர். (ம-135)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இல. 48, 2ஆம் குறுக்குத் தெருவில் (பாங்ஷால் வீதிக்கும், பிரதான வீதிக்கும் இடையில்) 5 அறைகளுடனான மாடிவீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
*திரு. இராஜபாலன்,*
*புதுமை மாதா கோயில்,*
*கிழக்கு வீதி, குருநகர்.*
*(சனி,ஞாயிறு தினங்களில் திரு. K.R. தவேந்திரன், 460, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)*
T.P.: 2222444 (8997)

## PHOTOSTAT MACHINE விற்பனைக்கு

மறுசீரமைக்கப்பட்ட கனோன் (CANON), சாப் (SHARP) நிழல்பட பிரதியாக்கம் செய்யும் இயந்திரங்கள் (JAPAN) பல மொடல்களில் விற்பனைக்குண்டு. 03.10.2002, 04.10.2002 ஆகிய இரு திகதிகளிலும் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.
*20, யுபிலி பஜார்,*
*சிமாட்டிஅருகில்,*
*யாழ்ப்பாணம்.* (9002)

## நாகம்ஸ் சுன்னாகம்



(சில்வ்)
காட்சிகள்: 11.00, 3.00 (ப.நே.)
சனிக்கிழமை முதல் M.G.R, ராதா, சரோஜா நடிக்க
இதயக்கனி
(8982)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

CONNIE NIELSEN, RICHARD HARRIS
IN
GLADIATOR (சில்வ்)
(தமிழாக்கம்)
அடிமை வம்சம்
காட்சிகள்: 11.00, 3.30, 6.00 (பதிவநேரம்)
(C-23810)


# காரைநகரில் இன்று முதியோர் தின விழா

ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் நடத்தும் முதியோர் தினவிழா இன்று மு.ப. 10மணிக்கு காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன தலைவர் அ.நல்லதம்பி, இளைப்பாறிய கொத்தணி அதிபர் கே.கே. நடராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

ஊர்காவற்றுறை பிரதேச முதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன், பாடசாலை மட்டத்தில் முதியோர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-73)


## NEW SCIENCE COLLEGE

PHYSICS

2004
ஒளியியல் (ஒளி முறிவு)
பிரிவுI: புதன் 4.15 - 5.15
வெள்ளி 4.30 - 6.00
பிரிவுII: சனி, ஞாயிறு (9-10)


2003
அலகு ரீதியான மீட்டல்
(வெப்பவியல்)
புதன், வியாழன் 6 - 7.30 p.m.

BY.R.குகன் (9009)

## ராஜா யாழ்ப்பாணம்.

இன்றும் மட்டும்
JEAN CLAUDE VANDAMME IN
DEATH WARRANT
10.30, 2.30, 4.30, 7.00
(C-23956)


# இதயங்கள் கனக்க கண்ணீருடன்



திருமதி
## சித்திராதேவி பவளநாதன்

*அன்பு மகளை அரவணைத்த கரங்கள்*
*இடைவழியில் செயலிழந்தது ஏனம்மா?*
*செயலிழந்த செய்தியைக் கேட்டறிய முன்னரே*
*சென்றுவிட்ட செய்தி வந்ததும் ஏனம்மா?*

விழிகள் நிறைந்த நீருடன் அன்புத் தாயின் மறைவினால் துடிக்கும் எம் அன்புத் தோழிகள் ப.நிருஷாந்தி, ப.உமாஷாந்தி மற்றும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

- ஆரம்ப உயர்தர மாணவ நண்பிகள்.

(8993)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு - 2002

| பெயர் | | புள்ளிகள் |
|---|---|---|
| ஈ. இரஞ்சினி | - | 157 |
| த. பார்த்திபன் | - | 156 |
| ஜெ. ஜெனனன் | - | 152 |
| செ. அனுந்துஜா | - | 148 |
| சி. பிரணவன் | - | 146 |
| கி. மாதங்கி | - | 139 |
| மு. பமீலா | - | 137 |
| இ. விதுசன் | - | 122 |
| ச. நித்தியா | - | 119 |

இத்தேர்வில் சித்தியடைந்த மாணவர்களையும், இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம். பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(9008)

# கேள்வி அறிவித்தலும், கூறுவிலை கோரலும்

# வேலணை பிரதேச சபை

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வியும், தளபாடங்களுக்கான கூறுவிலைகளும் எமது சபையால் கோரப்படுகின்றது.

| இல. | வேலை விவரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்படக்கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப்படமாட்டாதது) |
|---|---|---|---|
| 01 | ஊரதீவு சிறுவர் பாடசாலை மலசலகூடம் திருத்தம் | 3,800/- | 300/- |

**நிபந்தனைகள்:**

01) கேள்விப் பத்திரங்கள் 09.10.2002 ஆம் திகதி தொடக்கம் 11.10.2002 ஆம்திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பவற்றினைத் தாமே தயாரிக்கவேண்டும்.

03) கேள்விப் பத்திரங்களின் இரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரைவைத்து "தலைவர், வேலணை பிரதேச சபை, வேலணை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 14.10.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கிடையில் அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத் தபாலில் இடுபவர்கள் இடதுபக்க மேல் மூலையில் "வேலை விவரம்" எழுதுதல் வேண்டும்.

04) கேள்விகள் 14.10.2002ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

05) கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

06) மேலதிக விவரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

## கூறுவிலை கோரல்

**கீழ்வரும் தளபாடங்களுக்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது.**

01) பாலர் பாடசாலை மேசை.
02) பாலர் பாடசாலை கதிரை.

கூறுவிலைகள் எமது சபை தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவத்தில் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு 14.10.2002ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமது சபையிலுள்ள கேள்விப் பெட்டியிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கப்படவேண்டும். பதிவுத் தபாலில் இடுபவர்கள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சிறுவர் தளபாடங்களிற்கான கூறுவிலை" என எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.

ந.கருணாகரகுருமூர்த்தி
தலைவர்
வேலணை பிரதேச சபை.

*வேலணை பிரதேச சபை,*
*வேலணை.* (C-24050)

# மரண அறிவித்தல்

## பிலிப்பையா நீக்கிலஸ் மரியதாஸ் (J.P.)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கிளாலியை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா நீக்கிலஸ் மரியதாஸ் (J.P.) அவர்கள் நேற்று (02.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா நல்லதம்பி (ஆசிரியர்) இன்னேசியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் யோகராணியின் அன்புக் கணவரும் மேரி றோசாவின் பாசமிகு சகோதரரும் எட்மன் (ஜேர்மனி), திறேஸ்ராணி (லண்டன்), மரீனாராஜி (நீர்கொழும்பு), ரஞ்சினி (மிருசுவில்), மரியநேசன் (லண்டன்), அன்ரன் மைக்கல் (ஜேர்மனி), ரஜனி (ஜேர்மனி), செபஸ்ரீனா (மிருசுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி (ஜேர்மனி), அன்ரன் (லண்டன்), லோரன்ஸ் (நீர்கொழும்பு), அகஸ்ரின் (ஆசிரியர், கிளாலி றோ.க.த.க.பாடசாலை), அரசு (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் றொசானி, றொகான், அபிசா, அபிசன், ஜோன் கிறிஸ்தோபர், றெக்சி, றெக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மரியநாயகத்தின் மைத்துனரும் மற்றும் இமல்டா, ஸ்ரான்லி (S.K.பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.ச.), ராஜினி, லோரன்ஸ் (ஜெயபிரதா நகைமாடம், யாழ்ப்பாணம்), அலோசியஸ் (UNICEF STAFF), அருளநேசன் (கனடா), ஸ்ரெல்லா கிறேஸ் (ஜடா).ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (03.10.2002) வியாழன் பிற்பகல் 4.00மணியளவில் (ப.நே.) புனித நீக்கிலஸ் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் புனித நீக்கிலஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி யோகராணி (மனைவி),
பிள்ளைகள்.

*கண்டி வீதி,*
*மிருசுவில்.* (9011)

# அதிகாரப் பகிர்வு, நிர்வாக அலகு குறித்து இறுதி அரசியல் தீர்வில் ஆராயப்படும்

## இது புதுவிதமான சமாதான முயற்சி என்கிறார் பிரதமர் ரணில்

கொழும்பு,ஒக்.3

சமாதான முயற்சியின் இறுதி அரசியல் தீர்வின்போது மத்திய அரசின் அதிகாரங்கள் என்ன? வலய அலகுகளின் அதிகாரங்கள் எவை என்பதையெல்லாம் தீர்மானிக்க ஏதாவது ஓர் அதிகார சபை, அமைப்புத் தேவையானதாகும் இலகுவாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை முதலில் தீர்த்தபின்னர் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பது இலகுவானதாகும். அதிகாரத்தைப் பகிரும் முறை என்ன? நிர்வாக அலகு என்ன? அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் இறுதி அமைப்பு எது என்பது குறித்து அப்பொழுது ஆராயப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவனின் நூல் வெளியீடு தொடர்பாக இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் ரணில் அங்கு மேலும் கூறியதாவது:-

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களுக்குப் போர்நிறுத்தம்மூலம் நன்மை செய்யவே நாம் சமாதான முயற்சியை ஆரம்பித்தோம். 20 ஆண்டுகளாக போரினால் இன்னல்களை அனுபவிக்கும மக்கள் இனிமேலும் போரில் சிக்கி கஷ்டப்படுவதை அனுமதிக்க முடியாது.

வடக்கில் ஏற்பட்டிருக்கும் அழிவுகள் யூகோஸ்லாவியாவில் ஏற்பட்டிருக்கும் அழிவுகளைப் போன்றவை. ஆனால், போர்நிறுத்தம் மூலம் மக்களுக்குப் பெறுபேறுகளை, பலன்களை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

அழிந்த பிரதேசங்களைப் புனரமைக்கவேண்டும். இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் அவர்களின் பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வசதிகள் ஏற்படுத்தவேண்டும்.

புதைக்கப்பட்டிருக்கும் 20 லட்சம் கண்ணிவெடிகளை அகற்றவேண்டியிருக்கிறது. மக்கள் அச்சமின்றி வாழ்வதற்காகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியிருக்கிறது. எந்த நேரத்திலாவது குண்டு வெடிக்குமோ என்ற மக்களின் மன அச்சத்தைப் போக்கவேண்டும்.

இவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டே நாம் உலக நாடுகளிடம் உதவி கோருகின்றோம். நாட்டைக் கட்டியெழுப்ப உதவுமாறு கேட்கிறோம்.

இது புதுவிதமான சமாதான முயற்சி. அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுதல், அதிகாரத்தைப் பகிரும் அலகு போன்றவை குறித்து பேச்சு நடத்தாமல் முதலில் செய்யக்கூடிய ஏனைய விடயங்களைச் செய்வதே இப்பொழுது நடைபெறுகிறது.

அயர்லாந்தில் போர் நிறுத்தத்துடன் அந்நாட்டு மக்களின் வாழ்க்கை இலகுவானதால் சமாதான முயற்சி வெற்றிபெற்றதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் என்னிடம் கூறினார்.

கூட்டுச் செயலணி ஒன்றை அமைப்பதையே நாம் முதல் நடவடிக்கையாகச் செய்யப்போகிறோம் அரசும் புலிகளும் இணைந்து அந்தச் செயலணிக் குழுவை அமைத்த பின்னர் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கூட்டுக் குழு ஒன்று அமைக்கப்படும். எதிர்வரும் மாதங்களில் மேலும் பெறுபேறுகள் கிடைக்கும்.

இந்த நாட்டின் மக்கள் அனைவருக்கும் சமாதான உரிமைகள் இருக்கவேண்டும்.

- இவ்வாறு பிரதமர் கூறினார்.(ஐ)


இன்று முதல்
'லயன் எயார்' LIONAIR
இன்று பிற்பகல் முதல் இடம்பெறும் 'லயன் எயார்' விமான சேவைக்கான டிக்கெட்டுக்கள்
இல.212, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மகாலட்சுமி கட்டடத்தில் வழங்கப்படவுள்ளன.
ஒருவழிக் கட்டணம் ரூபா 1999/=
சொகுசான பிரிட்டிஷ் விமானம்!
கைதேர்ந்த பிரிட்டிஷ் விமானிகள்!!
உங்கள் பயணம் உல்லாசமாகட்டும்.!!! (C-24055)



மீண்டும்
LIONAIR விமானசேவை
யாழ்ப்பாணம் — கொழும்பு
ஒருவழிக் கட்டணமாக
ரூபா 1999/=
பதிவுக் கட்டணம் ரூபா 100 மட்டும்
சாந்தி கபே
278, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.:021-222-3553
(8994)



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!
10 மாதகாலத்தினுள் ஆங்கிலத்தைப் பிறர் உதவியின்றி வாசித்துப் புரிந்துகொள்ளவும் சுயமாக இலக்கணப் பிழையின்றி கருத்துள்ள வசனங்களை அமைக்கவும் பயிற்றுவிக்க நாங்கள் தயார்! நீங்கள்???
ஆரம்பம்: 06.10.2002
By: K.T.Rajah
T.P.: 021-2222588 (Home)
077-174512 (Hand Phone)
ENGLISH ACADEMY
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(8893) பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூ.1,500/= மட்டும்.



வாழ்த்துகின்றோம்



யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரும் எமது கல்வி நிறுவனத்தின் இரசாயனவியல் ஆசிரியருமான
ந.மகேஸ்வரன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் M.Phil பட்டம் பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துகின்றோம்.
நிரு கல்வி நிறுவனம்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
(8962)


### பிரதமருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஒன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்றுப் பிரதமருக்கு அனுப்பி வைத்தார்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்திப்பதற்கு தமக்கு வாய்ப்பளிக்குமாறு கோரி கைதிகள் உண்ணா விரதத்தை ஆரம்பித்திருப்பது தெரிந்ததே. (ஐ)

### கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனாலேயே அவர் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமான கும்புறுபிட்டியில் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் தீபால் சமந்தவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளிடம் புலிகளின் கும்புறுபிட்டி இராணுவ் பொறுப்பாளர் ஈகன் ஒப்படைத்தார்.

அப்போது அங்கே கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த அப்துல் புறுககான், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் லீனா மில்னர் மற்றும் டுண்ஸன் பொணட், வணபிதா திஸாநாயக்க, புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்ராஜேஸ், குச்சவெளி அரசியல் பொறுப்பாளர் சிவகுமார், கும்புறுபிட்டி முகாம் முக்கியஸ்தர்களான கலையரசன், உதயன் முதலானோர் சமுகமளித்தனர்.

இராணுவத்தினர் ஏழு பேரும் ஆயுதங்களுடன் தமது முகாம் பகுதிக்கு கடந்த 25 ஆம் திகதி வந்தபோதே அவர்களைத் தாம் கைது செய்தனர் என்று புலிகள் கூறுகின்றனர்.(ஐ-5)


எமது புதிய VEDIO - CD வெளியீடு
Dragon - CD வெளியீடு
சரத்குமாரின்
சமஸ்தானம்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல், யாழ்ப்பாணம்.
(C-24054)


### 12 சிறுவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் வைத்து இவர்கள் அனைவரும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஒப்படைக்கப்பட்டவர்களில் 6 பேர் ஆண்கள் 6பேர் பெண்களாவர்.

இந்தச் சிறுவர்கள் அனைவரும் மீண்டும் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட விடயத்தைத் தாம் மிகவும் வரவேற்பதாக இந்நிகழ்வில் கலந்து கொண்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதித் தலைவர் பெக்கா விகஹெவல் தெரிவித்தார். 12 சிறுவர்களுக்கும் புலிகளின் அரசியல்துறையினர் அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கினர். (எ-10-8)

### மாணவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீதியடைந்து ஓடிய மாணவி வீதியில் வந்த ஒருவரின் துணையுடன் பாதுகாப்பாக வீட்டுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து பாடசாலைக்குச் சமுகமளித்தார் எனவும் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

### குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்கள் தேவைப்பட்டனவா?

தவிரவும் எந்த மாணவனைப் பாடசாலையில் சேர்க்கப் பிரதமர் லஞ்சம் வாங்கினார்? எவர் மூலம் வாங்கினார்? இந்த விவரங்கள் எவற்றையும் ஜனாதிபதி தனது குற்றச் சாட்டில் தெரிவிக்கவில்லை இதிலிருந்தே ஜனாதிபதி தெரிவித்தது கட்டுக்கதை என்பது புலனாகிறது என்று அறிக்கையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

### திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்குத் தேவையான வழிவகைகளை ஆராயும் பொருட்டு பாதுகாப்பு மன்றத்தின் கூட்டமொன்றை நடத்தவிருக்கிறார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புலிகள் இராணுவத்தினரைத் தடுத்து வைத்திருப்பது ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 03 - 06 - 1928



மறைவு 03 - 09 - 2002

திருமதி செல்லத்துரை மகேஸ்வரி

அன்பின் அணிகலமாய் அமைதியின் உறைவிடமாய்த் திகழ்ந்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பலவகைகளில் தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.10.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (8935) - குடும்பத்தினர்.


## மரண அறிவித்தல்கள்

### தம்பையா இராசையா

63, சிவன் பண்ணை வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கட்டைப்பிராயை வசிப்பிடமாக கொண்டவருமான தம்பையா இராசையா நேற்று (02.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் இராஜேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா, இராசசிறி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரன், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மாமனாரும் திலக், தீபா, ஜெயசீலன், சுபா, கிருபா, மதன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் பாக்கியம், லக்சுமி, நடராஜா, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னக்கோயில் தெரு,
கட்டைப்பிராய்,கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (9012) - தகவல்: N.S.ரூபன் (பேரமகன்)

### திருமதி தம்பிப்பிள்ளை நல்லம்மா

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை நல்லம்மா அவர்கள் நேற்று (02.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - அம்மணி தம்பதியினரின் மருமகளும் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தம்புராசா, சிவசம்பு, இராசமணி, கந்தையா ஆகியோரின் சகோதரியும் கணேசலிங்கம், கணேஸ்வரி, கமலாம்பிகை, தில்லையம்பலம், கனகாம்பிகை, ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தம்பிப்பிள்ளை (கணவர்)
(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்)
ஆனைக்கோட்டை.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (9013)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.